

# கலைஞர் அரசும் காவலர் நலனும்









# காவலர் நலன் காக்கும்

# **கலைஞர்** அரசு

*வெளியீடு* :

இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை,

தமிழ்நாடு அரசு.

சிறப்பு வெளியீடு

# காவலர் நலன் காக்கும் கலைஞர் அரசு

'தமிழரசு' இலவச வெளியீடு

*வெளியிடுபவர்:*
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002

"புலியும் மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்ததாக புராணங்கள் கூறும் - புலியும் மானும் கூட வேண்டாம்; மானும் மானுமாவது இந்தக் காலத்தில் ஒரே துறையில் தண்ணீர் குடிக்க வேண்டாமா? "ஒன்றே குலம்" என்ற கொள்கை வெற்றியடைய காவல்துறையும் கடமையாற்றிட வேண்டாமா?"

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர்.

# முன்னுரை

**ம**க்களாட்சி முறையினை ஏற்றுக்கொண்டு, வளர்ந்துவருகின்ற ஒரு அரசமைப்பில், சட்டம்–ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, அமைதிச் சூழல் நிலவினால்தான், வளர்ச்சித் திட்டங்களை செம்மையுறச் செயல்படுத்திட இயலும். அதிலும், குறிப்பாகத் தமிழகத்தில்தான், **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்** அவர்களின் வழிகாட்டுதலுடன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் வெற்றியடைய காவல்துறையின் முழு ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது.

காவல்துறையினரின் செயல்பாடு என்பது, சராசரித் துறைப்பணியுமல்ல; காலவரையறையை உட்படுத்தியதுமல்ல. காலம் நேரம் பாராமல், கடமையைக் கண்ணெனக் கொண்டு அல்லும், பகலும் உழைத்திட வேண்டிய மாபெரும் பொறுப்பு காவலர்களுக்கு உண்டு. அதில், கீழ்மட்டக் காவலர் மேல்மட்ட அலுவலர் என்ற வேறுபாடின்றி, 'ஒரு கூட்டு முயற்சியாக' மேற்கொள்ளப்படுவதுதான் 'காவலரின் கடமை' என்றாகிறது. சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை கடுமையாகிறபொழுது, மிகுந்த நிதானமும், பொறுப்பும் நிறைந்த ஒரு தனித்துவ லாவகத்தோடு அது கையாளப்பட்டாக வேண்டும். சோதனை மிகுந்த அத்தகு தருணங்களில், நம் காவலர்கள் இழப்புகளுக்கு ஆளாக வேண்டியதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

எனவேதான், நமது பொறுப்புகளையும், அதை நிறைவேற்றுவதில் நமக்கேற்படுகிற பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு, மனிதாபிமான அடிப்படையில், மாண்புகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் பல்வேறு

நலத்திட்டங்களையும், அரசு ஆணைகளையும் பிறப்பித்துள்ளார்கள். இந்தியாவிலேயே தமிழக அரசுதான் மத்திய அரசுக்கு இணையாக காவலர்களின் ஊதியத்தை உயர்த்தியுள்ளது என்று காவல்துறையினர் அனைவரும் பெருமிதம் கொள்ளும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்துள்ளார்கள். மேலும் கூடுதல் நேரப்படி, பணிப்படி, மருத்துவப்படி, சீருடைப்படி, உணவுப்படி, நற்பணி சிறப்பு ஊதியம், கருணைத் தொகை, உணவு மான்யத் திட்டம், கல்வி ஊக்கத்தொகை, காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல், இலவச மின்சார மீட்டர் பொருத்துதல் போன்ற பல திட்டங்களையும் காவலர்களுக்கு தமிழக அரசு வழங்கியுள்ளது.

இத்தகு நலத்திட்டங்களைக் காவல்துறையில் பணியாற்றும் அனைவரும் அறிந்து, தெளிந்து பயனடையும் வகையில், இச்சிறு கையேடு ஒரு தகவல் புத்தகமாக வெளிக் கொணரப்பட்டுள்ளது.

**எப்.சி. சர்மா,** இ.கா.ப.,
தமிழ்நாடு காவல்துறைத் தலைவர்

# பொருளடக்கம்


பக்கம்

**1. பணிச்சலுகைகள்** **1–13**

1. காவல் கமிஷன்கள்
2. காவலர்களுக்கு மேம்பட்ட ஊதியம்
3. அப்பழுக்கற்ற நற்பணிக்காக சிறப்புப் படி
4. ஓட்டுநர்களுக்கு சிறப்புப்படி
5. செயல்திறமைக்கான படி
6. சீருடைப்படி
7. இடர்ப்படி
8. மருத்துவப்படி
9. காவல் இசைக்குழுவினருக்கு சிறப்பூதியம்
10. சிறப்பு இடர்ப்படி
11. மலைவாழ் படி
12. கூடுதல் நேரப்பணிப்படி
13. உணவு கட்டணத்தொகை
14. சாப்பாட்டு முன்பணம்
15. பயணப்படி
16. பயண விடுப்புச் சலுகை
17. சிறப்பு ஊக்கத்தொகை
18. ஈட்டிய விடுப்பை சரண்செய்தல்
19. வாகன முன்பணம்
20. திருமணக்கடன்

**2. காவலர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள்** **14–18**

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் காவல்பதக்கமும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கமும்
2. வீரம்செறிந்த பணிக்கான தமிழக முதல்வரின் பதக்கம்
3. அண்ணா பதக்கம் – தமிழக முதல்வரின் காவல் பதக்கம்
4. காவலர்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்
5. உத்தமர் காந்தி பதக்கம்

3. காவலர்களுக்கு வெகுமதி 19–21

1. காவல்துறைக்கு வெகுமதி
2. காவலர்களுக்கு வெகுமதி
3. தூய்மைப்பணி பரிசு
4. காவலர்/உதவி ஆய்வாளர்கள் – புதிய நியமனங்கள்

4. சிறப்பு நலத்திட்டங்கள் 22–30

1. தமிழ்நாடு காவல்துறை நலநிதி
2. தமிழ்நாடு காவலர் மருத்துவ உதவி நிதித்திட்டம்
3. காப்பீட்டுத்திட்டம்
4. கருணைத்தொகை
5. மருத்துவப் பரிசோதனை
6. காவல்துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டம்

5. கல்விச் சலுகைத் திட்டங்கள் 31

1. 12வது மற்றும் 10வது வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுத்திட்டம்.
2. காவல்துறையினரின் குழந்தைகளுக்கான தமிழக அரசின் சிறப்பு உதவித்தொகை
3. வீரச்செயல் புரிந்து மரணமடைந்த காவலரின் பிள்ளைகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு.

6. வீட்டு வசதி 32–38

1. வாடகையற்ற குடியிருப்புகள்
2. காவலர் குடியிருப்புகளில் கழிப்பிடங்கள்
3. சொந்தமாக வீடுபெறும் திட்டம்
4. காவலர் குடியிருப்புகளுக்கு மின்சார மீட்டர் பொருத்துதல்.
5. காவலர் குடியிருப்புகளில் மின் விசிறிகள் பொருத்துதல்.

7. இறுதிகட்ட ஓய்வூதிய சலுகைகள் 39–46

1. ஓய்வு பெறும்/மரணமடையும் அரசு ஊழியர்க்கு ஓய்வூதியச் சலுகைகள் விவரம்
2. வயது முதிர்வு ஓய்வூதியம்
3. குடும்ப ஓய்வூதியம்
4. சிறப்பு பொதுவைப்பு நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம்

5. இறுதிகட்ட விடுப்பு சம்பளம்
6. ஒரு பகுதி ஓய்வூதியத்தை பணமாக மாற்றிப்பெறும் திட்டம்
7. சொந்த காரணங்களுக்காக எடுக்கும் விடுப்பைப் பணமாகத் தருதல்
8. பொதுவைப்பு நிதித் தொகையை இறுதியாகப் பெறுதல்
9. தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோரின் மருத்துவ நலநிதி திட்டம்
10. விருப்ப ஓய்வுபெறும் திட்டம்
11. பயணப்படி அரசு ஊழியர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்குதல்

**8. பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் அளிக்கப்படும் சலுகைகள் 47–51**

1. அரசு ஊழியர் இறந்தால் அவரது பிரேதத்தை எடுத்துச்செல்லுதல்
2. அவரது குடும்பத்தின் உடனடி தேவைகளை சமாளிக்க முன்பணம்
3. குடும்ப உறுப்பினர்களுக்குப் பயணப்படி
4. கல்விச் சலுகைகள்
5. மருத்துவச் சலுகைகள்
6. குடும்பப் பாதுகாப்பு நலநிதி
7. கருணை அடிப்படையில் பணி நியமனம்

**9. வீரதீர செயல் புரிந்து மரணம் அடைந்தவர் குடும்பத்திற்கு அளிக்கப்படும் சலுகைகள் 52**

26.8.96 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் 53–54

25.4.97 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் 55–63

25.5.98 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் 64–67

தமிழ்நாடு காவல் – ஒரு கண்ணோட்டம் 68–69

காவலர் பணி அமைப்பு முறையும் பதவி உயர்வுகளும் 70–71

தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடு – ஒரு ஒப்புநோக்கு 72

காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்கள் 73–74

காவல் நிலைய வகைகளின் விவரம் 75–76

# 1. பணிச்சலுகைகள்

## 1) காவல் கமிஷன்கள்

தமிழக காவல்துறையின் சீரிய செயலாக்கத்திற்கும் – காவல் பணியாளர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் இந்த அரசு ஆற்றியுள்ள – ஆற்றிவரும் பணிகள், இதர மாநில அரசுகளுக்கும் வழிகாட்டத்தக்கவையாகும்.

1969ஆம் ஆண்டில் தமிழகக் காவல்துறை மேம்பாட்டிற்கென ஆர்.ஏ.கோபாலசாமி அய்யங்கார், ஐ.சி.எஸ். தலைமையில், முதல் போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது.

அது, இந்தியாவில் ஒரு மாநில அரசு அமைத்த முதல் போலீஸ் கமிஷன் ஆகும்.

அதைப்போலவே 1989ஆம் ஆண்டில் தமிழக அரசு மீண்டும் அமைந்த பிறகு, ஓய்வு பெற்ற முன்னாள் தலைமைச்செயலாளர் பி.சபாநாயகம் தலைமையில் தமிழகத்தில் இரண்டாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டது.

இந்த இரண்டு போலீஸ் கமிஷன்களும் வழங்கிய பரிந்துரைகளை ஏற்று – காவல் பணியாளர்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2. காவலர்களுக்கு மேம்பட்ட ஊதிய விகிதம்

1969ல் நியமிக்கப்பட்ட காவல் குழுவின் பரிந்துரையின்படி பின்வருமாறு ஊதியங்கள் மாற்றியமைக்கப்பட்டன. அதேபால 1989ல் அமைக்கப்பட்ட காவல் குழுவின் பரிந்துரைப்படியும் காவல் பணியாளரின் ஊதியங்கள் பின்வருமாறு உயர்த்தி யமைக்கப்பட்டன.

| பதவிகள் | 1969க்கு முன் உள்ள ஊதிய விகிதம் | 1972ல் ஊதிய விகிதம் | 1.1.96க்கு முன்பு | தற்போது வழங்கப்பட்டுள்ள ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1. இரண்டாம் நிலை காவலர் | 70-1-75-2-95 | 150-4-170-5-225 | 825-15-900-20-1200 | 3050-75-3950-20-4590 |
| 2.முதல்நிலை காவலர் | (இப்பதவி இல்லை) | 200-5-250-10-300 | 950-20-1150-25-1500 | 3200-85-4900 |
| 3.தலைமை காவலர் | 90-2-110 | 210-5-245-10-325 | 1200-30-1560-40-2040 | 4000-100-6000 |
| 4.உதவி ஆய்வாளர் | 140-5-220 | 300-15-420-20-500 | 1600-50-2300-60-2660 | 5300-150-8300 |
| 5. ஆய்வாளர் | 180-5-200-10-300 | 425-25-700 | 2000-60-2300-75-3200 | 6500-200-10500 |

1.6.88ன் படி காவல்துறையில் காவலர்களின் ஊதிய விகிதம் அலுவலக உதவியாளர்களின் ஊதியத்தைவிட சிறிதளவே அதிகமாக இருந்தது.

அலுவலக உதவியாளர் ஊதியம் ரூ.750-12-870-14-945
காவலர் ஊதியம் ரூ.825-15-900-20-1200

காவலர்களின் ஊதியம் ரூ.2750-70-3800 என முதலில் நிர்ணயிக்கப்பட்டது. பின் மத்திய அரசு காவலர்களின் ஊதியம் ரூ.3050-75-3950-80-4590 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தமையால் தமிழக காவலர்களின் ஊதியத்தையும் ரூ.3050-75-3950-80-4590 ஆக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** 28.8.1998 அன்று ஆணையிட்டுள்ளார். மத்திய அரசில் ஒரே நிலை காவலர்கள்தான் உள்ளனர். தமிழக காவல்

துறையில் இரண்டாம் நிலை, முதல்நிலை என இரண்டு நிலைக் காவலர்கள் உள்ளனர். தமிழக காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர்கட்கு மத்திய அரசு காவலர்கட்கு வழங்கும் சம்பளமான ரூ.3050-75-3950-80-4590-ஐ தற்பொழுது தமிழகஅரசு வழங்கியுள்ளது. முதல்நிலை காவலர்கட்கு ஊதிய விகிதம் ரூ.3200-85-4900 என்றும் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மத்திய அரசு காவலர்கட்கு இணையாக இரண்டாம் நிலை காவலர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்கியது தமிழக வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இதர காவல் பணியாளர்களின் ஊதிய விகிதம் முதல்வர் கலைஞர் அவர்களால் பின்வருமாறு 1.1.96 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

| | 1.1.96க்கு முன் | 1.1.1996க்குப் பின் |
|---|---|---|
| தலைமைக் காவலர் | ரூ.1,200-30-1,500-40-2,040 | ரூ.4,000 - 100 - 6,000 |
| உதவி ஆய்வாளர் | ரூ.1,600-50-2,300-60-2,660 | ரூ.5,300 - 150 - 8,300 |
| ஆய்வாளர் | ரூ.2,000-60-2,300-75-3,200 | ரூ.6,500 - 200 - 10,500 |
| துணை கண்காணிப்பாளர் | ரூ.2,200-75-2,800-100-4,000 | ரூ.8,000 - 275 - 13,500 |
| கூடுதல் கண்காணிப்பாளர் | ரூ.3,000-100-3,500-125-4,500 | ரூ.10,000 -325 - 15,200 |
| கண்காணிப்பாளர் | ரூ.3,700-125-4,700-150-5,000 | ரூ.12,000 -375 - 16,500 |

3) அப்பழுக்கற்ற நற்பணிக்காக சிறப்புப்படி

1996இல் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய சிறப்புத் திட்டம்

1.6.97 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண் 873ன் படி களங்கமின்றி நற்பணியாற்றும் காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு தற்போது பின்வருமாறு மாதம் ஒன்றுக்கு சிறப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டது.

| வ. எண் | நற்பணி புரிந்த ஆண்டுகள் விவரம் | ஏற்கனவே வழங்கப் பட்டது | தற்போது உயர்த்தப்பட்ட தொகை |
|---|---|---|---|
| அ. | 15 ஆண்டுகள் | ரூ.5/- | ரூ.15/- |
| ஆ. | 20 ஆண்டுகள் | ரூ.7.50 | ரூ.20/- |
| இ. | 25 ஆண்டுகள் | ரூ.10/- | ரூ.25/- |
| ஈ. | 30 ஆண்டுகள் | ரூ.15/- | ரூ.30/- |
| உ. | 35 ஆண்டுகள் | ரூ.20/- | ரூ.40/- |

இந்த உயர்த்தப்பட்ட சிறப்புப்படி இறுதி வரை நற்பணி புரிபவர்களுக்கு வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

4) ஓட்டுநர்களுக்கான சிறப்புப் படி.

ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் படி, மாதம் ஒன்றுக்கு ரூ.40/- என்பது ரூ.60/- ஆக அரசாணை எண்.1481 (உள்துறை) தேதி 3.10.96 மூலம் முதல்வர் கலைஞர் அவர்களால் உயர்த்தப்பட்டது.

5) செயல் திறமைக்கான படி

தலைமைக் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.5/- எனவும் காவலர்களுக்கு ரூ.3/- எனவும் வழங்கப்பட்டுவந்த செயல்திறமைப்படி தலைமைக் காவலர்களுக்கு ரூ.15/- எனவும், காவலர்களுக்கு ரூ.10/- எனவும், 1.10.96 முதல் உயர்த்தி 30.10.96 நாளிட்ட உள்துறை (காவல்.8) அரசு ஆணை (நிலை) எண்.1480ல் முதல்வர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

6) சீருடைப் படி

தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு மாதம்தோறும் வழங்கப்படும் ரூ.25/- சீருடைப்படி, அரசாணை எண்.1479 (உள்துறை) நாள் 3.10.96ன் மூலம் ரூ. 30/- ஆக உயர்த்தப்பட்டது.

தற்பொழுது காவல் பணியாளர்களில் அனைத்துப் (இந்திய காவல்பணி அதிகாரிகளைத் தவிர) பிரிவினருக்கும் பின்வருமாறு சீருடைப்படி 17.6.98 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.786 உள்துறை (காவல்.8)ல் முதல்வர் கலைஞர் அவர்களால் உயர்த்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| காவல்துறை கண்காணிப்பாளர்கள் (இந்தியக் காவல் பணி அல்லாத) கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் | ரூ.40/-லிருந்து ரூ.60/- |
| ஆய்வாளர்கள்/உதவி ஆய்வாளர்கள் | ரூ.30/-லிருந்து ரூ.50/- |
| தலைமைக் காவலர்கள்/காவலர்கள் | ரூ.30/-லிருந்து ரூ.40/- |

7) இடர்ப்படி

17.6.98 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.784 உள்துறை (காவல்.8)ன் படி காவலர் முதல் ஆய்வாளர் வரை வழங்கப்பட்ட இடர்ப்படி மாதம் ரூ.20/- என்பது ரூ.50/. ஆகவும், கூடுதல் கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், உதவித் தளவாய், துணைத் தளவாய் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இடர்ப்படி ரூ.30/- என்பது ரூ.60/- ஆகவும் முதல்வர் கலைஞர் அவர்களால் உயர்த்தப் பட்டுள்ளது.

8) மருத்துவப்படி

ஒரு அரசு ஊழியர், தனக்கோ தன்னைச் சார்ந்துள்ளவர்களுக்கோ மருந்துகள் வாங்கும்போது, அரசு ஆணை எண் 499 நிதித்துறை நாள் 15.9.98ன் படி ஒரு மாத திருத்திய ஊதியத்தில் உச்சவரம்பாக 60 விழுக்காடுகள் அவருக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

இத்தொகை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரின் சான்றிதழின் பேரில் வழங்கப்படும். இச்சலுகையைப் பெற விரும்பாத ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- மருத்துவப் படியாக வழங்கப்படுகிறது. ஒரு அரசு ஊழியர், இந்த இரண்டு வகை சலுகைகளையும் பெற முடியாது. தற்பொழுது அரசுப் பணியில் சேர்பவர்கள், 1.1.95க்கு பிறகு மருத்துவப் படி பெறுவதற்கு மட்டுமே தகுதியுடையவர்கள்.

9) காவல் இசைக் குழுவினருக்குச் சிறப்பூதியம்

மாநில காவல் இசைக் குழு மற்றும் ஆவடி படைக்கல மைய இசைக்குழு ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 30.6.97 நாளிட்ட அரசு உள்துறை ஆணை நிலை எண்.977ன் படி சிறப்பூதியம் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

| | மாநில காவல் இசைக்குழு | 30.6.97க்கு முன் - பின் மாதம் |
|---|---|---|
| 1. | சேமப்படை ஆய்வாளர் மற்றும் பேண்ட் மாஸ்டர் | ரூ.50/- என்பது ரூ.100/- |
| 2. | உதவி சேமப்படை ஆய்வாளர் மற்றும் உதவி பேண்ட் மாஸ்டர் | ரூ.25/- என்பது ரூ.75/- |
| 3. | தலைமைக் காவலர் | ரூ.25/- என்பது ரூ.60/- |
| 4. | காவலர் நிலை - 1 / நிலை - 2 | ரூ.15/- என்பது ரூ.40/- |

| | ஆவடி படைக்கல மையக்குழு | 30.6.97க்கு முன் - பின் மாதம் |
|---|---|---|
| 1. | உதவி ஆய்வாளர் (பேண்ட்) | ரூ.25/- என்பது ரூ.75/- |
| 2. | அவில்தார் (பேண்ட் ) | ரூ.10/- என்பது ரூ.50/- |
| 3. | நாயக் மற்றும் லான்ஸ் நாயக் | ரூ.10/- என்பது ரூ.40/- |

10) சிறப்பு இடர்ப்படி

சிறப்புப் புலனாய்வுப் பிரிவில் பணிபுரியும் காவலர்கள் அனைவரும் மாதம் ரூ.1000/- சிறப்பு இடர்ப் படியாக பெற, 27.7.98 நாளிட்ட உள்துறை (காவல்.12) அரசாணை எண். 976ல் ஆணையிடப்பட்டுள்ளது.

11) மலை வாழ் படி.

மலைவாழ் இடம் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், தங்கள் ஊதியத்தில்

20 சதவிகிதத்தை மலைவாழ்ப் படியாகப் பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். இந்தப்படி, உயர்ந்தபட்சமாக 1.9.98 முதல் ரூ.450/= ஆக உயர்த்தி 15.9.98 நாளிட்ட நிதித்துறை ஆணை எண் 499ல் ஆணையிடப்பட்டுள்ளது. ஈட்டிய விடுப்பில் இருக்கும் காலத்திற்கும் இந்தப் படி சேர்த்து வழங்கப்படும்.

12) கூடுதல் நேரப் பணிப் படி.

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் விடுப்பு/ விடுமுறையின்றிப் பணிபுரிய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அதற்காக அவர்களுக்கு ஈடு செய்யும் வகையில் கூடுதல் நேரப் படி வழங்கப்படுகிறது.

ஒரு நாளைக்கு ரூ.20/- என்று வழங்கப்பட்ட இத்தொகை, தற்போது ரூ.50/-ஆக, அரசு ஆணை எண். 785 உள்துறை (காவல்.8) நாள் 17.6.98ல் முதல்வர் கலைஞர் அவர்களால் உயர்த்தப்பட்டது.

13. உணவுக் கட்டணத் தொகை

பந்தோபஸ்து, சட்டம் ஒழுங்கு மற்றும் அதி முக்கிய நபர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் காவலர்களுக்கு, தூரம், பணியின் நேரம், இடம் ஆகியவைகள், நிலைமைக்குத் தக்கவாறு மாறுகின்றன.

இவற்றை கருத்தில் கொண்டு - காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை பணிபுரியும் காவல் பணியாளர்களுக்கு அரசாணை உள்துறை எண்.808 நாள்.27.5.97ன் படி உயர்த்தப்பட்டுள்ள உணவு கட்டணங்களின் விவரம் வருமாறு.

| பதவி | ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் உணவு கட்டணங்கள் |
|---|---|
| | 27.5.97க்கு<br>முன் - பின் |
| காவல் ஆய்வாளர் உதவி ஆய்வாளர் | ரூ.30/- என்பது ரூ45/- |
| தலைமைக் காவலர் முதல் நிலைக் காவலர் | ரூ.20/- என்பது ரூ30/- |
| இரண்டாம் நிலைக் காவலர் | ரூ.16/- என்பது ரூ25/- |

இக்கட்டணங்கள் தற்பொழுது 12.6.98 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்.753 உள்துறை(காவல்.13)ன் படி, தலைமைக் காவலர், முதல்நிலைக் காவலர், நாயக் ஆகியோருக்கு ரூ.40/- ஆகவும், இரண்டாம்நிலைக் காவலர், லான்ஸ் நாயக் ஆகியோருக்கு ரூ.35/- ஆகவும் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

14. சாப்பாட்டு முன்பணம்

தமிழ் நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கு நிரந்தர சாப்பாடு முன்பணத்தினை ஒரே சீராக ரூ.5,000லிருந்து ரூ.25,000ஆக உயர்த்தி அரசு ஆணை எண் 972 உள் (காவல்-9) துறை நாள் 27.6.97ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

15) பயணப்படி.

7.7.89 நாளிட்ட நிதித்துறை அரசு ஆணை எண்.695ல் அரசு பயணப்படியின் உச்சவரம்பை 40 சதவிதமாக நிர்ணயித்து முதல்வர் கலைஞரால் ஆணையிடப்பட்டது. தற்பொழுது அரசாணை எண். 1456 உள்துறை நாள் 30.9.97ன் மூலம் பயணப்படியின் உச்சவரம்பு

முதல்வர் கலைஞர் அவர்களால் பின்வருமாறு மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

| வ எண் | பிரிவுகள் | 30.9.97 ஆண்டுக்கு முன் உச்சவரம்பு | 30.9.97 ஆண்டுக்குப் பின் உச்சவரம்பு |
|---|---|---|---|
| அ. | தமிழ்நாடு சிறப்புக்காவல்படை குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகள் | 40% | 45% |
| ஆ. | மாவட்டங்கள்/ஆயுதப்படை நகரம் | 30% | 40% |
| இ. | ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் பயணம் மேற்கொள்ளும் போது தர வேண்டிய படி | 45% | 53 1/3% |

16) பயண விடுப்புச் சலுகை.

இச்சலுகை இரண்டு வருடப் பணி முடித்த அனைத்து நிரந்தர அரசு ஊழியர்கள், தகுதிகாண் பருவத்தை முடித்தவர்கள் மற்றும் இதர ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, ஒரு ஊழியர் தான் பணிபுரியும் இடத்திலிருந்து, மாநிலத்திற்குள் எந்த இடத்திற்கும் பயணம் செய்யமுடியும்.

17. சிறப்பு ஊக்கத்தொகை

காவல்துறையில் சிறப்புப்பயிற்சி பெற்று வரும் அதிரடிப் படையைச் சார்ந்த காவலர்களுக்கு, சிறப்புத் தேர்வுகள் நடத்தி தேர்வு பெற்றவர்களுக்கு ரூ.500/- ஒரே ஒரு முறை மட்டும் சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

18) ஈட்டிய விடுப்பை சரண் செய்தல்.

படிகள் இல்லாத அசாதாரணமான விடுப்பு அல்லது தனிப்பட்ட காரணங்களுக்காக ஈட்டிய விடுப்பு அல்லாமல், அரசு ஊழியர் ஒருவர் விடுப்பில் இருக்கும் போதோ அல்லது பணியில் இருக்கும் போதோ ஈட்டிய விடுப்பை சரண் செய்யலாம்.

15 நாட்களை சரண் செய்வதற்கு 12 மாதங்களும், 30 நாட்களை சரண் செய்வதற்கு 24 மாதங்களும் இடைவெளி இருத்தலும் அவசியம்.

அரசு குடியிருப்பில் வசிக்கும் ஊழியர்களும், ஈட்டிய விடுப்பு ஊதியத்தோடு, வீட்டு வாடகைப்படி பெற தகுதியுள்ளவர்கள். வாடகை இல்லாத அரசு குடியிருப்பில் வசிக்கும் அரசு ஊழியர்களுக்கு, விடுப்பை சரண் செய்யும் காலத்தின்போது, வீட்டு வாடகைப்படி வழங்கப்படமாட்டாது.

19) வாகன முன் பணம்

அ) அரசாணை எண்.485, நிதி (சம்பளம்) துறை,தேதி.8.8.96.ன்படி வாகன முன் பணத் தொகைகளை உயர்த்தி முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

| வரிசை எண் | வாகன வகைகள் | 8.8.96க்கு முன்பு ரூ. | தற்போது ரூ. |
|---|---|---|---|
| 1. | சைக்கிள் | 1,000 | 1,500 |
| 2. | மோட்டார் சைக்கிள்/ ஸ்கூட்டர் (புதியது) | 25,000 | 35,000 |
| 3. | மோட்டார் சைக்கிள்/ ஸ்கூட்டர் (பழையது) | 8,000 | 12,000 |

| | | | |
|---|---|---|---|
| 4. | மோட்டார் கார் (புதியது) | 1,40,000 | 2,00,000 |
| 5. | மோட்டார் கார் (பழையது) | 60,000 | 90,000 |
| 6. | மொபட் | 5,000 | 9,000 |

**ஆ) அரசாணை எண்.413, நிதி(சம்பளம்) துறை, தேதி 13.8.98ன் படி வாகன முன்பணம் பின்வருமாறு மேலும் உயர்த்தி வழங்கப்படுகிறது.**

1) மோட்டார் கார் (புதியது) - அடிப்படைச் சம்பளம் ரூ.10,000 மற்றும் அதற்கு மேல் சம்பளம் பெறுபவர்கள் ரூ.2 இலட்சம் முதல் ரூ.4 இலட்சம் வரை.

2) மோட்டார் கார் (பழையது) - அடிப்படைச் சம்பளம் ரூ8,000 மற்றும் அதற்கு மேல் பெறுபவர்கள் ரூ.95,000 அல்லது 35 மாத அடிப்படைச் சம்பளம்

3) மோட்டார் சைக்கிள்/ (புதியது) - அடிப்படைச் சம்பளம் ரூ.4,000 மற்றும் அதற்கு மேல் - ரூ.35,000 அல்லது மோட்டார் சைக்கிள் விலை

4) மோட்டார் சைக்கிள்/ (பழையது) - அடிப்படைச் சம்பளம் ரூ.4,000 வாங்கும் ஊழியர்களுக்கு ரூ.12,000மும் புதிய ஸ்கூட்டர் (80சிசி) வாங்க, ரூ.25,000மும் பழைய ஸ்கூட்டர் வாங்க ரூ.8,000மும் வழங்கப்படும்

5) மொபட் - ஆறு ஆண்டுகள் பணியாற்றிய எல்லா அரசு ஊழியர்களும் ரூ.9,000 கடன் பெறலாம்.

20) திருமணக்கடன்

பணி முறைப்படுத்தப்பட்ட நிலையில் அமர்த்தப்பட்ட நிரந்தர அரசு ஊழியர்களுடன் நிரந்தரமற்ற அரசு ஊழியர்களும் திருமணக்கடன் கோரி விண்ணப்பிக்கும்போது தகுதிகாண் பருவம் முடித்தவராக இருப்பின் இக்கடன் அனுமதிக்கப்படுகிறது.

ஆண் அரசு ஊழியர் அல்லது அரசு ஊழியரின் மகன் 21 வயது முடித்தவராகவும், பெண் அரசு ஊழியர் அல்லது அரசு ஊழியரின் மகள் 18 வயது முடித்தவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆண் அரசு ஊழியர் அல்லது மகன் திருமணத்திற்கு கடன்தொகையாக இருந்த ரூ.3,000/-த்தை ரூ.6,000/- ஆகவும் பெண் அரசு ஊழியர் அல்லது மகள் திருமணத்திற்கு கடன்தொகையாக இருந்த ரூ.5,000/-த்தை ரூ.10,000/- ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. ஒருவர் தன்னுடைய பணிக்காலத்திற்குள் இருமுறை இக்கடனைப் பெற தகுதியுடையவர்.

## 2.காவலர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள்.

**1) இந்திய குடியரசுத் தலைவரின் காவல் பதக்கமும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கமும்.**

சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் ஆகியவற்றின் போது, இதுகுறித்து அறிவிப்பு வெளியிடப்படும். குடியரசுத் தலைவரின் பதக்கம் தனித் தன்மை வாய்ந்த பணி அல்லது பாராட்டத்தக்க அளவு பணியின்பால் ஈடுபாடு ஆகியவற்றிற்காகவும், காவல் பதக்கம், குறிப்பிடத்தக்க பணி மற்றும் தகுதியின் அடிப்படையிலும் வழங்கப்படுகிறது. மெச்சத் தகுந்த முறையில் பணியாற்றிடாத மற்றும் நேர்மையில் சந்தேகம் கொண்ட அதிகாரிகளுக்கு இவை வழங்கப்படமாட்டாது. இப்பதக்கங்களைப் பெற அதிகாரிகள் 15 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். இப்பதக்கங்களைப் பெற்ற அதிகாரிகள் மீண்டும் ஒரு முறை பதக்கம் பெற ஆறு ஆண்டுகள் நிறைவுபெற்றாக வேண்டும். எனினும், வீரம் செறிந்த பணிக்கு இத்தகைய கால நிர்ணயம் பொருந்தாது.

**2) வீரம் செறிந்த பணிக்கான தமிழக முதல்வரின் பதக்கம்.**

வீரம் செறிந்த பணிக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கம், தமிழ்நாடு முதல்வரின் காவல் பதக்க விதிகள் பிரிவு 17(இ) அடிப்படையில், காவல் துறை இயக்குநரின் பரிந்துரைக்கு ஏற்ப அரசால் வழங்கப்படுகின்றது. இப்பதக்கம் பெற்றவர்களுக்கு ரூ.100/- மாதந்தோறும் படியாக வழங்கப்படும்.

**3) அண்ணா பதக்கம் - தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்.**

1969ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு முதல்வரின் காவல் பதக்கம், மெச்சத் தக்க வகையில் பணியின்பால் ஈடுபாடு கொண்ட காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 65 பதக்கங்கள், பின்வரும் விவரங்களின் அடிப்படையிலும், ஒட்டுமொத்த தொகைகளின் ஒதுக்கீடு

அடிப்படையிலும் வழங்கப்படுகிறது. (அரசு ஆணை நிலை எண் 2086 உள்துறை நாள் 21.8.1969).

தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம் - அண்ணா பதக்கம் பெறுகின்ற காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கு (மொத்தம் 25 பேர்) வழங்கப்பட்ட வந்த அண்ணா பதக்க விருது தொகை ஒவ்வொருவருக்கும் ரூ.1,500லிருந்து ரூ.2,000மாக உயர்த்தப்பட்டுள்ளது.

உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு (மொத்தம் 30 பேர்) வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருதுத் தொகை ஒவ்வொருவருக்கும் ரூ.2,500லிருந்து ரூ.3,000மாக உயர்த்தப்பட்டுள்ளது.

காவல் துறை துணைக்கண்காணிப்பாளர்களுக்கு (மொத்தம் 10 பேர்) வழங்கப்பட்டு வந்த அண்ணா பதக்க விருது தொகை ஒவ்வொருவருக்கும் ரூ.4,000 என்பது ரூ.5,000 என வழங்கப்பட்டுள்ளது.

மேலே காணும் அண்ணா பதக்கம் பெறுவோரில் வீரதீரச்செயல் புரிந்தோர்க்கு சிறப்புப் படியாக ரூ.100/- மாதம்தோறும் வழங்கப்படும்.

இதுவரையிலும் வழங்கப்பட்ட பதக்கங்கள் விவரம் வருமாறு :-

| வருடம் | கடமையில் வீரம் | கடமையில் முழு ஈடுபாடு |
|---|---|---|
| 1969 | - | 22 |
| 1970 | 4 | 20 |
| 1971 | 5 | 23 |
| 1972 | 3 | 22 |
| 1973 | 5 | 23 |

| | | |
|---|---|---|
| 1974 | 4 | 21 |
| 1975 | 4 | 23 |
| 1976 | அமைச்சரவை இல்லை | |
| 1977 | - | 25 |
| 1978 | 1 | 34 |
| 1979 | 1 | 34 |
| 1980 | 10 | 35 |
| 1981 | 5 | 35 |
| 1982 | 10 | 33 |
| 1983 | 6 | 54 |
| 1984 | 4 | 52 |
| 1985 | 6 | 56 |
| 1986 | 5 | 55 |
| 1987 | 5 | 49 |
| 1988 | அமைச்சரவை இல்லை | |
| 1989 | 7 | 48 |
| 1990 | 9 | 48 |
| 1991 | 6 | 51 |
| 1992 | 2 | 55 |
| 1993 | 2 | 63 |
| 1994 | 6 | 59 |
| 1995 | 4 | 61 |
| 1996 | 8 | 65 |
| 1997 | 4 | 63 |
| 1998 | 9 | 64 |
| மொத்தம் | 135 | 1193 |

**4) காவலர்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்.**

1) இரண்டாம் நிலை, முதல் நிலைக் காவலர்கள், லான்ஸ் நாயக்குகள், நாயக்குகள், அவில்தார்கள், தலைமைக் காவலர்கள் ஆகியோர், 10 ஆண்டு காலம் பணியாறறியிருந்தால், இப்பதக்கம் பெற தகுதி உடையோராவர்.

2) தண்டனை பெற்ற எவரும் இப்பதக்கம் பெறத் தகுதி அற்றவர்.

3) சட்டம்-ஒழுங்கு, குற்றம், போக்குவரத்து, நுண்ணறிவு, மாவட்ட ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, விளையாட்டு மற்றும் பொது மக்கள் தொடர்பு அல்லது காவல் துறை களப்பணியில் சிறப்பான திறமையை வெளிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய மெச்சத்தக்கப் பணி ஆகியவற்றில் தலைசிறந்த திறமை படைத்தவர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்படும்.

**2.6.97 நாளிட்ட உள்துறை மந்தணம் அரசு ஆணை எண்.834ன் படி இப்பதக்கம் பெறும் காவலர் மற்றும் லான்ஸ் நாயக்குகளுக்கு மாதம் ரூ.20/- என்பது ரூ.40/-ஆகவும், தலைமைக் காவலர், நாயக்குகள், அவில்தார்கள் ஆகியோருக்கு மாதம் ரூ.25/- என்பது ரூ.50/- ஆகவும் வழங்கப்படுகிறது.**

துறைக்கு விசுவாசம் இன்றி பணியாற்றினாலோ அல்லது பணியில் கவனக்குறைவாக நடந்து கொண்டது உயர் அதிகாரியின் கவனத்திற்கு வந்து தண்டனை பெற்றாலோ, இப்பதக்கம் பெறுவோர் அதனை இழக்க நேரிடும். அதனைத் தொடர்ந்து, மாதந்தோறும் வழங்கப்படும் படித் தொகையும் நிறுத்தப்படும்.

5) உத்தமர் காந்தி பதக்கம்

கள்ளச்சாராயத்தை மிகச் சீரியமுறையில் தடுத்திடும் ஆற்றல் மிக்க ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 1996ஆம் ஆண்டு முதல் உத்தமர் காந்தி பதக்கமும் ரூ.10,000/- பணமுடிப்பும் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 5 காவல் ஆய்வாளர்களுக்கும் 3 உதவி ஆய்வாளர்களுக்கும் பதக்கங்களும், பணமுடிப்பும் வழங்கப்பட்டுள்ளன.

# 3) காவலர்களுக்கு வெகுமதி

## 1) காவல்துறைக்கு வெகுமதி

சமீபத்தில் கோவை நகரில் ஏற்பட்ட தொடர் வெடிகுண்டு சம்பவங்கள் அரசுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியது. பொதுமக்களிடையே நம்பிக்கையை ஊட்டும் வகையில் காவல்துறையினர் முனைப்புடன் செயல்பட்டு வெடிகுண்டுகளையும், வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தும் வெடிமருந்து சம்பந்தப்பட்ட பொருள்களையும் ஏராளமான அளவில் கண்டு பிடித்துச் செயல் இழக்கச் செய்தனர். இவ்வாறாக, காவல்துறையினர், திறமையுடனும், விவேகத்துடனும் பாராட்டும் வகையில் செயல்பட்டு எண்ணற்ற வெடிகுண்டுகளையும் அங்கீகாரமற்ற வெடிமருந்து பொருள்களையும் கண்டு பிடித்து செயலிழக்கச் செய்து திறம்பட செயலாற்றிய நற்பணியைப் பாராட்டும் விதத்தில், காவலர் முதல் காவல்துறை தலைமை இயக்குநர் வரை அனைவருக்கும் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வீதம் வெகுமதி வழங்க 31.3.98 நாளிட்ட உள்துறை அரசாணை எண்.395ல் அரசு ஆணையிட்டு அதற்காக ரூ.8.5 கோடி வழங்கியது. இந்த அளவு தொகை, காவல்துறை வரலாற்றில் இதுவரை காவல் பணியாளர்களுக்கு வெகுமதியாக வழங்கப்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 2) காவலர்களுக்கு வெகுமதி

காவல் துறையில் உள்ள களப்பணியாளர்களில் காவலர் முதல் உதவி ஆய்வாளர் வரை உள்ள காவல் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வெகுமதியாக அளிக்கப்பட்ட தொகை வருமாறு :-

| வருடம் | இலட்சம் |
|---|---|
| 1993-94 | ரூ.29.42 |
| 1994-95 | ரூ.51.11 |
| 1995-96 | ரூ.45.54 |
| 1996-97 | ரூ.56.14 |
| 1997-98 | ரூ.66.33 |

3) தூய்மைப்பணி பரிசு

25 ஆண்டுகள் தூய்மையான பணியாற்றிய காவலர் உட்பட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் ரூ.500க்கான இந்திர விகாஸ் பத்திரம் வழங்கப்படுகிறது.

4) காவலர்/உதவி ஆய்வாளர்கள் - புதிய நியமனங்கள்

1989ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படாத 2,000 காவலர்களில் நியமனம் செய்யப்படாத, வேறு எந்த வேலைக்கும் செல்லாமல் தகுதிபடைத்தவர்களாக இருந்த 1,024 நபர்கள் 1997 நவம்பரில் காவலர்களாக நியமிக்கப்பட்டனர்.

கடந்த காலத்தில் 10,000 காவலர்கள் நியமிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு பட்டியல் வெளியிடப்படாமல் இருந்தது. 1996ல் இந்த அரசு அவ்விளைஞர்களின் எதிர்கால நலன் கருதி அவர்கள் அத்தனைபேரும் நியமனம் செய்யப்படுவார்கள் என முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பின் படி முதல் கட்டமாக 1,581 பெண்காவலர்கள் உட்பட மொத்தம் 4,602 காவலர்கள் 15.4.97 அன்று பணியில் அமர்த்தப்பட்டனர்.

இரண்டாம் கட்டமாக 4,677 ஆண் காவலர்களும், 1,023 பெண் காவலர்களும் ஆகமொத்தம் 5,700 காவலர் 1.11.1997 முதல் பயிற்சியளிக்கப்பட்டு தற்போது காவல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உதவி ஆய்வாளகளை (Sub Inspectors)பொறுத்த வரை, 1994-95ஆம் ஆண்டில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் பொதுப்போட்டியில் 1,100 பேர்

நியமனத்திற்க்கென தேர்வு செய்யப்பட்டிருந்தனர், அவர்களில் 500 பேர்கள் மட்டுமே பயிற்சிக்கு அனுப்பப்பட்டிருந்தனர். பயிற்சியை முடித்த பின் அந்த 500 பேர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு அவர்கள் உதவிஆய்வாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

1,100 நபர்களில் எஞ்சிய 600 நபர்களுக்கும் 2.6.97ல் உரிய ப்யிற்சிகளுக்கான ஆணை வழங்கப்பட்டது. இவர்களுடன் காவல்துறையில் பணிபுரிந்து வரும் பட்டதாரிக் காவலர்கள் மற்றும் தலைமைக்காவலர்கள் ஆகியோரிலிருந்து உதவி ஆய்வாளர் பதவிகளுக்கு 267 பேர் தேர்வுசெய்யப்பட்டனர். ஆகமொத்தம் 867 பேர் 2.6.97 முதல் பயிற்சிஅளிக்கப்பெற்று உதவி ஆய்வாளர்களாக பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் 5,000 ஆண் காவலர்கள், 5,000 பெண்காவலர்கள், என மொத்தம் 10,000 பேர் நியமிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டு அதன் படி தேர்ந்தெடுக்கப்படுபவர்க்கு உடல் திறன், எழுத்துத்தேர்வுகள், ஆண்காவலர்களுக்கும் உதவி ஆய்வாளர்களுக்கும் முடிந்துள்ளன. விரைவில் 3,671 ஆண் காவலர்களும், 1,000 உதவிஆய்வாளர்களும் நியமனம் செய்யப்பட உள்ளனர். 5,000 பெண் காவலர்களுக்கான உடல் திறன் மற்றும் எழுத்துதேர்வுகள் விரைவில் நடத்தப்பட உள்ளன.

# 4. சிறப்பு நலத் திட்டங்கள்

## 1. தமிழ்நாடு காவல்துறை நல நிதி

காவல் துறையிலுள்ள அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் (காவல்துறை களப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள்) மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நிதி மற்றும் பிற அல்லல்களைத் தீர்க்கும் நோக்குடன் நிவாரணம் வழங்க தமிழக அரசு 1957ம் வருடம் தமிழ்நாடு காவல் துறை நலநிதித் திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு காவலர் மருத்துவ நிதி உதவித் திட்டத்தின் கீழ் வராத, மருத்துவமனைகளில் நோய்க்காக எடுத்துக்கொண்ட சிகிச்சைக்காகவும், மருத்துவ செலவுத் தொகையைத் திரும்பப் பெறும் திட்டத்தின் கீழ் வராத சிகிச்சைக்காவும், சிறப்பு மருத்துவ உதவியின் அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.5,000/- வழங்கப்படுகிறது. **மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரின் அறிவிப்பிற்கிணங்க 11.6.97 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண்.874ன் படி இந்நிதிக்கு அரசின் மானியம் ரூ.10 இலட்சம் என்பது ரூ.25 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.**

2. இந்த நிதியின் மூலமாக பல்வேறு நலத்திட்டங்களுக்கு வழங்க ஆகும் செலவினை ஈடுகட்ட, அரசு மானியம் தவிர, சந்தா தொகைகளும் நன்கொடைகளும் கூட முறையே சந்தாதாரர்களிட மிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் ஆண்டிற்கு இருமுறை அதாவது ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் பின்வரும் வகைகளில் வசூலிக்கப்படுகிறது.

| சந்தா | ஆண்டிற்கு |
|---|---|
| உதவி ஆய்வாளர்/படைக்கல உதவி ஆய்வாளர்/ கண்காணிப்பாளர்/உதவியாளர் | ரூ.100/- |
| உதவியாளர் (தனிப்பிரிவு)மற்றும் மேலாளர்(தனிப்பிரிவு) | |
| உதவி ஆய்வாளர் (தொழில்நுட்பம் மற்றும் விரல்ரேகை) | |

| | |
|---|---|
| தலைமைக் காவலர் (அவில்தார்)/இளநிலை உதவியாளர்/முதல் மற்றும் இரண்டாம்நிலை காவலர்/சுருக்கெழுத்து தட்டச்சர்/தட்டச்சர் | ரூ.50/- |
| பதிவறை எழுத்தர்/அலுவலக உதவியாளர்/ அடிப்படை அரசு ஊழியர் அதற்கும்கீழ் | ரூ.30/- |

நன்கொடை

| | |
|---|---|
| காவல்துறை இயக்குநர்/கூடுதல் காவல்துறை இயக்குநர்/காவல்துறைத் தலைவர் | ரூ.300/- |
| காவல்துறைத் துணைத்தலைவர்/இயக்குநர், காவல் தொலைத்தொடர்பு | ரூ.200/- |
| காவல்துறை கண்காணிப்பாளர்/தளவாய்/ கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்/கூடுதல் தளவாய்/ கண்காணிப்பாளர் (விரல்ரேகை)/இணைக்காவல் கண்காணிப்பாளர்/நேர்முக உதவியாளர்/ஆய்வாளர்/ படைக்கல ஆய்வாளர்/கண்காணிப்பாளர்(தேர்வுநிலை)/ ஆய்வாளர்(தொழில்நுட்பம் மற்றம் விரல்ரேகை | ரூ.150/- |

3. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் ஒருவர் இறந்தால், பதவி வித்தியாசமின்றி அனைவருக்கும் ஒரே சீராக ரூ.4,000/- குடும்ப நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

4. சந்தாதாரர்களின் பெற்றோர், குழந்தைகள் மற்றும் மனைவி/ கணவன் ஆகியோர் இறக்க நேரிட்டால், முறையே ரூ.500/-, ரூ.750/- மற்றும் ரூ.1,000/- கருணைத் தொகையாக வழங்கப்படும்.

5. இந்நிதியின் சந்தாதாரர்களின் குழந்தைகள் பன்னிரெண்டாம் வகுப்பு படித்தால், அவர்களுக்கு கல்விச் செலவுக்காக ரூ.500/- வழங்கப்படும்.

6. சந்தாதாரர்களின் குழந்தைகளுக்கு கல்விக் கொடையாக ஒரு தடவை மட்டும், பின்வரும் படிப்புகளுக்கு அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு கல்வி முதலாண்டின் இறுதியில் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| தொழிற்கல்வி | ரூ.5,000/- |
| பட்டயப்படிப்பு/ முதுநிலைப் பட்டப்படிப்ப, | ரூ.3,000/- |
| பட்டப் படிப்பு/ஐ.டி.ஐ | ரூ.2,000/- |

1996-97ம் ஆண்டில் 1,682 மாணவர்களுக்கு ரூ.44.43 இலட்சமும் 1997-98ம் ஆண்டில் 1,952 மாணவர்களுக்கு ரூ.48.63 இலட்சமும் கல்விக் கொடையாக வழங்கப்பட்டது.

7. மாவட்ட மற்றும் நகரங்களிலுள்ள குழுக்களுக்கு, விண்ணப்பதாரர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, மருத்துவ மற்றும் குடும்ப உதவித் தொகைகளை விரைவில் வழங்க, அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கென அதிகரிக்கப்பட்ட இருப்புத் தொகையும் வழங்கப்பட்டது.

8. மரணம் இயற்கையாக நிகழாதபோது, (காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் வராதவை) சூழ்நிலை சாட்சியங்களை கணக்கில் எடுத்துக் கொண்டு பரிசீலனை செய்யப்பட்டு, காவல்துறை இயக்குநர் அவர்களால் அதிகபட்சமாக ரூ.50,000/- வழங்கப்படும்.

9. சந்தாதாரர்களின் குழந்தைகள் பல்கலைக்கழக அளவில் திறந்தவெளி விளையாட்டுக்களில் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தால், ஒவ்வொருவருடைய தரத்திற்கும் ஏற்ப காவல்துறை இயக்குநர் முடிவு செய்து, ஊக்கத் தொகையாக வழங்கிடலாம்.

2) தமிழ்நாடு காவலர் மருத்துவ உதவி நிதித் திட்டம்

காவல்துறையில் பணியாற்றும் அமைச்சு மற்றும் அனைத்துப் பணியாளர்களிடமும் இத்திட்டத்திற்காக சந்தாத் தொகையாக ரூ.20/- ஒவ்வொரு ஜூன் மாத ஊதியத்தில் வசூல் செய்யப்படுகிறது. அரசாணையில் கூறப்பட்டுள்ளபடி, காவல்துறையில் பணியாற்றும் அமைச்சு மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் உட்பட அனைவருக்கும், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, திருத்தியமைக்கும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றிற்கு நிதிஉதவிகள் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்கு ரூபாய் ஒரு இலட்சமும், வெளிநாடுகளில் சிகிச்சை எடுத்துக் கொள்ளப்பட்டால் மேற்கொண்டு ரூபாய் ஒரு இலட்சம் கடனாகவும் (10சதவிகித குறைந்த வட்டி) அதிகபட்சமாக வழங்கப்படும். திருமணமான அரசு ஊழியர்களின் மனைவி மற்றும் குழந்தைகள் மற்றும் திருமணமாகாத ஊழியரை சார்ந்துள்ள பெற்றோர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் உதவி பெற அரசு ஆணை நிலை எண்.1490 உள்(காவல்.9) நாள் 4.10.96ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

12.2.98 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண்.164ன் படி தமிழ்நாடு அரசு ஊழியர் மருத்துவ உதவிதிட்டத்தில் உள்ளது போல் காவலர் மருத்துவ உதவிதிட்டத்தில் கண் அறுவை சிகிச்சைக்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இஃதன்றி திருவனந்தபுரத்தில் உள்ள

சித்திரைத் திருநாள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், பெங்களூர் நிமான்ஸ் மருத்துவமனை மற்றும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனை ஆகியவற்றில் காவலர்கள் மருத்துவ சிகிச்சை பெறவும் அனுமதித்து மேற்கூறப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. ஆண்டு சந்தாத் தொகை தற்போது ரூ.25/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், 16.6.98 நாளிட்ட உள்துறை(காவல்.9) அரசு ஆணை எண்.768ல் மேலும் சில தரம் வாய்ந்த மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவும், கருப்பை அகற்றுதல், தீக்காயங்கள், மூளைக்காய்ச்சல் சம்பந்தப்பட்ட நோய்கள் மற்றும் கண் லேசர் சிகிச்சை ஆகியவைகளும் இத்திட்டதிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

3) காப்பீட்டுத் திட்டம்

பொதுவான காவல் பிரிவுகள், சிறப்பு அதிரடிப்படை, கோர் செல், கமாண்டோ படை மற்றும் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில் பணியாற்றும் காவல் துறை அதிகாரிகளும், காவலர்களும், பணியின்போது விபத்தில் இறக்க நேரிட்டாலோ, பணியின்போது ஊனமடைய நேர்ந்தாலோ, அவர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தார்க்கும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

அ. காவல் துறையில் பணியாற்றும் பொதுவான காவல்துறை களப்பணியாளர்களுக்கு, அவர்களுக்கு வழங்கப்படும் இறப்பு மற்றும் ஓய்வூதியக் கருணைக்கொடைத் தொகை (டி.சி.ஆர்.ஜி.) யைத் தவிர, அவர்கள் பணியின்போது விபத்தில் இறக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்தாருக்கு பின்வரும் முறையில் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

| வரிசை எண் | பதவி | காப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | காவலர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் | 1 இலட்சம் |
| 2. | காவல் கண்காணிப்பாளர் முதல் காவல் துறை தலைவர் வரை | 5 இலட்சம் |
| 3. | கூடுதல் காவல் துறை இயக்குநர் | 7.5 இலட்சம் |
| 4. | காவல் துறை இயக்குநர் | 10 இலட்சம் |

காயச் சான்றிதழில் குறிப்பிடப்படும் முடமாதல் மற்றும் காயத்தின் தன்மையின் விழுக்காட்டின் அடிப்படையில் காப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஆ. சிறப்பு அதிரடிப்படை, கோர் செல், கமாண்டோ படை பள்ளியில் பணியாற்றும் அனைத்துக் காவல் துறையினர்களுக்கும் அவர்கள் பணியிலிருக்கும் போது இறந்தால், அவர்களின் குடும்பத்தாருக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படும். இச்சிறப்புப் பிரிவுகளில் பணியாற்றும் காவலர் தங்கள் கடமையை ஆற்றும்போதோ, விபத்தின்போதோ, காயம்பட்டாலோ, முடமானாலோ, அதன் தன்மையைப் பொறுத்து ரூ.20,000/- லிருந்து ரூ.5 இலட்சம் வரை உதவி அளிக்கப்படுகிறது. 27.5.97 நாளிட்ட அரசு உள்துறை ஆணை எண்.805ன் படி தற்போது இக்காப்பீட்டுத் தொகைகளை அரசே வழங்குகிறது.

**4) கருணைத் தொகை**

அ. 23.4.79 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண்.1057ல் வீரதீர செயல்களில் மரணம் அடையும், காயம் அடையும் காவல்துறையினருக்கு கருணைத்தொகை வழங்க

ஆணையிடப்பட்டது. அதனைத் தற்பொழுதைய பொருளாதாரச் சூழல்களைக் கருத்தில் கொண்டும் காவல்துறையினர் சந்திக்கும் குற்றவாளிகள், சமூகவிரோதிகள், மேலும் அவர்களால் கடைப்பிடிக்கப்படும் கடுமையான நவீன குற்ற நடவடிக்கை முறைகளைக் காவல்துறையினர் வீரதீரச் செயல் புரிந்து சமாளிக்கும் பொழுது மரணம் அடைவதும், படுகாயம் அடைந்து ஊனம் அடைவதும் அதிகமாகி வருவதால் காவல் பணியாளர்களிடம் ஒழுங்கையும் மன உறுதியையும் ஏற்படுத்தும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவிப்பின் படி, 3.6.97 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண்.845ன் படி கருணைத் தொகையை பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

| வ எண் | வகை | 3.6.97 ஆணைக்கு | |
|---|---|---|---|
| | | முன் ரூ | பின் ரூ |
| அ. | வீர மரணம் அடைவோர் | 1,00,000 | .2,00,000/- |
| ஆ. | செயல்பட முடியாத படி நிரந்தர ஊனம் அடைவோர் | 20,000 | 50,000/- |
| இ. | படுகாயம் அடைவோர் | 5,000 | 10,000/- |
| ஈ. | சாதாரண காயம் அடைவோர் | 3,000 | 5,000/- |

ஆ. அரசு ஆணை (நிலை) எண் 7 உள் (காவல்.12) துறை நாள் 5.1.93ன் படி (சிறப்புப் பாதுகாப்புப் படை) தற்பொழுது கமாண்டோ போர்ஸ், கமாண்டோ பள்ளி மற்றும் கோர் செல் பிரிவில் பணிபுரியும் ஆளிநர்கள் வீரதீரச் செயல் புரிந்து பாதிக்கப்பட்டால் அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு கருணைத்தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

1. வீரமரணம் அடைவோர்

- துணைக் கண்காணிப்பாளர் - ரூ.5 இலட்சம்
- காவலர் முதல் ஆய்வாளர் வரை - ரூ.3 இலட்சம்

2. செயல்பட முடியாதபடி நிரந்தர ஊனம் அடைவோர் அனைத்து பிரிவினருக்கும்- ரூ.2 இலட்சம்

3. ஊனமடைந்தோர் அனைத்து பிரிவினருக்கும் ரூ.1 இலட்சம்

இ. இதுவல்லாமல், பணியிலிருக்கும்போது வீரச்செயல்புரிந்து இறந்துவிட்டால், அவரது குடும்பத்திற்கு, அவர் உயிருடன் இருக்கும் போது கடைசியாக பெற்ற சம்பளம், அவர் உயிருடன் இருந்து ஓய்வு பெறும் தேதிவரை, குடும்ப ஓய்வு ஊதியமாகவும், பின்னர் நடைமுறையில் உள்ள விதிகளின்படி குடும்ப ஓய்வு ஊதியம் பெறுவதற்கும் இறந்தவரின் குடும்பத்தார் தகுதியுள்ளவர்களாகிறார்கள்.

கடந்த 5 ஆண்டுகளில் கருணைத்தொகை வழங்கப்பட்ட விவரம் :

| வருடம் | வீரமரணம் அடைந்தோர் | | காயமடைந்தோர் | |
|---|---|---|---|---|
| | நபர் | ரூபாய் | நபர் | ரூபாய் |
| 1993-94 | 2 | 2,00,000/- | 189 | 4,00,000/- |
| 1994-95 | 3 | 3,00,000/- | 119 | 2,96,000/- |
| 1995-96 | 10 | 10,00,000/- | 80 | 1,60,000/- |
| 1996-97 | - | - | 108 | 1,89,000/- |
| 1997-98 | 3 | 3,00,000/- | 297 | 13,67,000/- |
| 4/98-6/98 | 1 | 2,00,000/- | 49 | 3,01,500/- |

5. காவல் துறையினருக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டம்.

அ) இத்திட்டம், 1.10.1980 ஆம் ஆண்டு முதல் அறிவிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. காவல் துறையில் காவலர் முதல், காவல் ஆய்வாளர் வரை இச்சலுகையைப் பெற

தகுதியுள்ளவர்கள். ஒரு குடும்பத்திற்கு அக்குடும்ப அங்கத்தினர்கள் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு அதிகபட்சமாக நான்கு அலகுகள் வழங்கப்படுகின்றன. ஒரு அலகிற்கு வழங்கப்படும் உணவுப்பொருட்களின் மதிப்பு ரூ.118.57. இதில் அரசு வழங்கும் மானியம் ரூ.51.60 ஆகும். இதேபோல் நான்கு அலகிற்கு ஆகும் மதிப்பு ரூ.378.30 ஆகும். அதில் அரசு மானியமாக ரூ.150.90 வழங்குகின்றது.

ஆ. இத்திட்டத்தின் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் 25.4.97ல் அறிவித்ததின் அடிப்படையில் 27.5.97 நாளிட்ட உள்துறை அரசாணை எண்.806ன் படி உணவுப்பண்டங்களுக்கு மானியம் பின்வருமாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| அரிசி, சர்க்கரை, கோதுமை, பாமாயில் | விலையில் 50 விழுக்காடு |
| துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு | ஒரு கிலோவிற்கு ரூ.4/- என்பது ரூ10/-ஆக உயர்வு |
| ரவை/ மைதா | ஒரு கிலோவிற்கு ரூ.1,50 என்பது ரூ.3/-ஆக உயர்வு |

இ. 80,000 காவல்துறை ஆளினர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கவும் அதன்மூலம் மண்ணெண்ணெய் மலிவு விலையில் வழங்குவதற்கும் அரசு ஆணை எண்.157 கூட்டுறவு நாள் 8.6.97ன்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஈ. 2.6.98 நாளிட்ட உள்துறை(காவல்.12) அரசு ஆணை (நிலை) எண். 643ன் படி மானிய விலையில் வழங்கப்படும் அரிசியின் அளவு குடும்ப அட்டை ஒன்றிற்கு, மாதத்திற்கு 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1998-99ம் ஆண்டிற்கு ரூ.4.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

# 5) கல்விச் சலுகைத் திட்டங்கள்

1. காவல்துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைகளில் 12வது மற்றும் 10வது வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெறும் முதல் மூன்று மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு நடைமுறைப் படுத்தியுள்ளது. தற்போது 27.5.97 நாளிட்ட அரசு உள்துறை நிலை ஆணை எண்.804ன் படி 12வது வகுப்பு பிள்ளைகளுக்கு முறையே ரூ.7,000/- ரூ.5,000/-மற்றும் ரூ.3,000/-மும் 10வது வகுப்பு பிள்ளைகளுக்கு முறையே ரூ.6,000/-, ரூ.4,000/- மற்றும் ரூ.2,000/ -மும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

2. காவலர் முதல் காவல் ஆய்வாளர் பதவி வரை உள்ள அனைத்து காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் கல்விக்கென காவல்துறையினரின் குழந்தைகளுக்கான தமிழக அரசின் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. தொழிற்கல்வியில் சேர்ந்து படிக்கின்ற சிறந்த மாணவர் ஒருவருக்கு ரூ.40,000/-மும், அடுத்த சிறந்து விளங்கக்கூடிய ஐந்து மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/-மும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

3. பணிக்காலத்தில் வீரச்செயல் புரிந்து அகால மரணமடைந்த காவல்துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கென மருத்துவம், பொறியியல் வேளாண்மை ஆகிய கல்லூரி படிப்புகளில் சேர ஒவ்வொன்றிலும் மூன்று இடங்களும், சட்டப்படிப்புக்கென இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

# 6) வீட்டு வசதி

## 1. வாடகையற்ற குடியிருப்புகள்

காவல்துறையில் உள்ளவர்களின் எண்ணிக்கை 86,090 அதில் காவல் துறை ஆய்வாளர் பதவி வரையுள்ள மொத்த நபர்களில், 28,792 நபர்களுக்கு வாடகையற்ற குடியிருப்புகள் அளிக்கப் பட்டுள்ளன. அதன் விழுக்காடு 30.75 ஆகும்

காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு 100 விழுக்காடு வீட்டு வசதி அளித்திட, 1997-98 நிதி ஆண்டிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும் 2,500 குடியிருப்புக்கள் கட்டித்தரப்படுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டின் நிதிநிலை (காவல்துறை) கூட்டத் தொடரில் அறிவித்துள்ளார்.

குடியிருப்புகளுக்கான மொத்த கட்டுமான செலவில் 40% தொகையை அரசாங்கம் ஒதுக்கீடு செய்கிறது. மீதமுள்ள 60% தொகையை உறட்கோ, கான்பைன் போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கடனாகப் பெறுகிறது.

அரசு ஆணை எண்.236 உள் (காவல்.10) துறை நாள்.12.2.97 மற்றும் அரசு ஆணை எண்.307உள்(காவல்.10) துறை நாள்.24.2.97ன் படி சென்னையில் காவல் நகரில் 11.02 கோடி ரூபாய் மதிப்பில் 1,000 காவல் குடியிருப்புகளையும், கோவை நகரில் 2.94 கோடி ரூபாய் மதிப்பில் 102 காவல் குடியிருப்புகளையும் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 2,500 காவலர் குடியிருப்புகளையும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 5ஆம் அணிக்கு தங்குமிடம் ஒன்றையும் (பாரக்ஸ்) கட்டுவதற்கு 70.46 கோடி ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. அதில் 408 குடியிருப்புகளை சென்னை நகரிலும், 2,092 குடியிருப்புகளை மாவட்டங்களிலும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1998-99ம் ஆண்டிலும் புதிதாக 2,500 வீடுகள் கட்டிட அரசு ஆணை எண் 332, உள்(காவல்.10) துறை நாள் 27.3.98ல் வரலாற்றிலேயே இல்லாத வகையில் முன்கூட்டியே ஆணையிடப்பட்டு ரூ.85 கோடி அனுமதிக்கப்பட்டது.

காவலர்களுக்கு தற்போதுள்ள குடியிருப்புகள்

| வ.எண் | மாவட்டம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை நகரம் | 4656 |
| 2. | திருநெல்வேலி நகரம் | 205 |
| 3. | மதுரை நகரம் | 993 |
| 4. | கோவை நகரம் | 773 |
| 5. | செங்கல்பட்டு கிழக்கு | 601 |
| 6. | காஞ்சிபுரம் | 713 |
| 7. | திருவள்ளுர் | 181 |
| 8. | விழுப்புரம் | 473 |
| 9. | கடலூர் | 717 |
| 10. | திருவண்ணாமலை | 516 |
| 11 | வேலூர் | 922 |
| 12. | சேலம் | 682 |
| 13. | நாமக்கல் | 254 |
| 14. | தருமபுரி | 624 |
| 15. | கோயம்புத்தூர் | 765 |
| 16. | ஈரோடு | 396 |
| 17. | நீலகிரி | 613 |
| 18. | திருச்சி நகரம் | 387 |
| 19. | திருச்சி | 766 |
| 20. | புதுக்கோட்டை | 408 |
| 21. | சேலம் நகரம் | 424 |

| | | |
|---|---|---|
| 22. | கரூர் | 209 |
| 23. | பெரம்பலூர் | 126 |
| 24. | தஞ்சாவூர் | 884 |
| 25. | நாகப்பட்டினம் | 835 |
| 26. | திருவாரூர் | 225 |
| 27. | மதுரை | 751 |
| 28. | திண்டுக்கல் | 761 |
| 29. | தேனி | 253 |
| 30. | ராமநாதபுரம் | 755 |
| 31. | விருதுநகர் | 1080 |
| 32. | சிவகங்கை | 665 |
| 33. | திருநெல்வேலி | 1102 |
| 34. | தூத்துக்குடி | 535 |
| 35. | கன்னியாகுமரி | 601 |
| 36. | காவல் பயிற்சி பள்ளி,வேலூர் | 1 |
| 37. | காவல் பயிற்சி பள்ளி, கோவை | 24 |
| 38. | இருப்புப் பாதை காவல்,சென்னை | 192 |
| 39 | இருப்புப் பாதை காவல், திருச்சி | 227 |
| 40. | த.சி.கா. 1 அணி | 349 |
| 41. | த.சி.கா.2 அணி | 374 |
| 42. | த.சி.கா. 4 அணி | 561 |
| 43. | த.சி.கா. 5 அணி | 440 |
| 44. | த.சி.கா. 6 அணி | 492 |
| 45. | த.சி.கா. 7 அணி | 352 |
| 46. | த.சி.கா. 8 அணி | 284 |
| 47. | த.சி.கா. 9 அணி | 493 |
| 48. | த.சி.கா. 10 அணி | 100 |
| 49. | படை பயிற்சி மையம், ஆவடி | 52 |
| | மொத்தம் | 28792 |

**தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலும் கட்டபட்டுவரும் குடியிருப்புகள்**

1997-98ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையில் இருந்த பணிகளையும், 1998-99ஆம் ஆண்டில், அரசால் அனுமதிக்கப்பட்ட 2,500 வீடுகளையும் சேர்த்து தற்பொழுது 6,664 வீடுகள் தமிழகம் முழுவதிலும் கட்டப்பட்டு வருகின்றன.

அவற்றின் விவரம்

| கட்டப்படும் இடங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| சென்னை | 2,376 |
| செங்கல்பட்டு, வேலூர், கடலூர் மாவட்டங்கள் | 477 |
| கோவை மாவட்டம் | 1,309 |
| திருச்சி, தஞ்சை மாவட்டங்கள் | 993 |
| மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் | 1,509 |
| ஆக மொத்தம் | 6,664 |

இவைகளில் 4,000 வீடுகள் 31.12.98ற்குள் கட்டிமுடிக்கப்பட்டு காவல் பணியாளர்களுக்கு ஒப்படைக்கப்படவுள்ளது.

**2. காவலர் குடியிருப்புகளில் கழிப்பிடங்கள்**

12.6.97 நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண். 884ன் படி காவலர் குடியிருப்புகளில் 103 இடங்களில் 2,751 குடியிருப்புகளில் ரூ.5.23 கோடி செலவில் கழிப்பிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டு உள்ளது.

## 3. சொந்தமாக வீடு பெறும் திட்டம்

வாடகைக்கான குடியிருப்புக்களை கட்டித் தரும் திட்டத்துடன் கூட, சொந்தமாக வீடு பெறும் திட்டத்தையும் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கென தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் செயல்படுத்தி வருகிறது. காவல்துறையைச் சார்ந்தவர்களுக்குச் சொந்தமாக வீடு பெறும் திட்டத்தின் கீழ் பின்வரும் வகைகளில் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | நாவல்பட்டு | எல்ஐஜி-2 | 108 | |
| | | எல்ஐஜி-1 | 432 | |
| | | எம்ஐஜி-1 | 72 | |
| | | எம்ஐஜி-2 | 50 | |
| | | ஈடபிள்யூஎஸ் | 8 | 670 |
| 2. | திம்மராஜபுரம் | | | |
| | முதல்கட்டம் | எல்ஐஜி | 235 | |
| | | எம்ஐஜி | 12 | 247 |
| | இரண்டாம் கட்டம் | எல்ஐஜி | 126 | |
| | | எம்ஐஜி | 14 | 140 |
| 3. | கணபதிபுரம் | எல்ஐஜி | 328 | |
| | | எம்ஐஜி | 52 | |
| | | எம்ஏ | 22 | 432 |
| 4. | தொரப்பாடி | | | |
| | முதல்கட்டம் | எல்ஐஜி | 55 | |
| | | எம்ஐஜி | 10 | 65 |
| | இரண்டாம் கட்டம் | எச்ஐஜி | 5 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எம்ஐஜி-1 | 30 | |
| | | எம்ஐஜி-2 | 39 | 74 |
| 5. | வேளச்சேரி | எச்ஐஜி | 32 | 32 |
| 6. | மதுரவாயல் | எச்ஐஜி | 36 | 36 |
| | மொத்தம் | | | 1696 |

<u>கட்டப்படவுள்ள புதிய திட்டங்கள் வருமாறு</u>

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | வசந்தாபுரம் நாமக்கல் மாவட்டம் | எம்ஐஜி | 126 | |
| | | எச்ஐஜி | 54 | 180 |
| 2. | அயனப்பக்குடி மதுரை மாவட்டம் | எம்ஐஜி | 33 | |
| | | எச்ஐஜி | 17 | 50 |
| 3. | அசூர் (கும்பகோணம்) | எம்ஐஜி | 35 | |
| | | எச்ஐஜி | 18 | 53 |
| | மொத்தம் | | | 283 |

**வீடுகட்டும் முன்பணம் வழங்க மும்மடங்கு நிதி ஒதுக்கீடு**

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் ஒவ்வொரு வீட்டிற்கான தொகை முழுமையும் காவல் துறை இயக்குநர் அவர்களால் வழங்கப்படும் வீடுகட்டும் முன்பணத் தொகைக்கு ஒப்ப சரி செய்யப்படுகிறது. வீடு கட்டுவதற்காக காவல் துறையின் இயக்குநர் அவர்களால் வழங்கக்கூடிய முன்பணக் கடன் தொகையின் ஒதுக்கீட்டு அளவை, அரசு ரூ.1 கோடியிலிருந்து,

ரூ.3 கோடியாக மும்மடங்கு உயர்த்தி 20.11.96 நாளிட்ட உள்துறை (காவல்.10) அரசாணை எண் 1749ன் படி ஆணையிட்டுள்ளது.

4) காவலர் குடியிருப்புகளில் "மின்சார மீட்டர்" ஒவ்வொரு வீட்டிற்கும் தனித்தனியே பொருத்துவது

அ) மாநிலம் முழுவதுமாக தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்குமென 22,717 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 13,932 வீடுகளுக்கு தனித்தனியே மின்சார மீட்டர்கள் பொருத்தப்படாமலிருந்தது.

ஆ) 1997-98 ஆண்டுக்கான காவல்துறை மானியத்தின் மீது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில், எந்தெந்த காவலர் குடியிருப்புகளில் தனித்தனியாக வீடுகளுக்கு மின்சார மீட்டர்கள் இல்லையோ அந்த வீடுகளிலெல்லாம் மீட்டர்கள் பொருத்துவதற்கு நடப்பு ஆண்டில் ரூ.4.18 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி அரசாணை எண்.825 உள்துறை, நாள் 30.5.97 வெளியிடப்பட்டது. மதுரை மாவட்ட ஆயுதப் படைக் காவலர் 164 நபர்களுக்கு, அவர்கள் தாங்களாகவே சொந்தமாக மீட்டர் பொருத்திக் கொண்ட செலவு ரூ.2,00,244/-ஐ அவர்களுக்கு திருப்பி வழங்க 3.6.98 நாளிட்ட அரசு ஆணை எண்.671, உள்( காவல்.16) துறையின்படி அனுமதிக்கப்பட்டது.

5) காவலர் குடியிருப்புகளில் மின்விசிறிகள் பொருத்துதல்

தமிழகத்தில் உள்ள 28,762 காவலர் குடியிருப்புகளில் 17,652 குடியிருப்புகளில் மின்விசிறிகள் உள்ளன. மின்விசிறிகள் இல்லாத 11,140 காவலர்/தலைமைக் காவலர் குடியிருப்புகளுக்கும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் மின்விசிறிகளைப் பொருத்த செலவினமாக ரூ.1.67 கோடி வழங்கி 18.6.98 நாளிட்ட உள்துறை அரசு ஆணை (நிலை) எண்.799ல் ஆணை வழங்கப்பட்டது.

# 7. இறுதிகட்ட ஓய்வூதியச் சலுகைகள்.

1. ஓய்வு பெறும்/மரணமடையும் அரசு ஊழியர்களுக்கு பின்வருமாறு பல்வேறு விதமான ஓய்வூதியச் சலுகைகள் நடைமுறையில் உள்ளன.

அ) வயது முதிர்வு ஓய்வூதியம்

ஆ) இறந்துவிடுவோர் / ஓய்வூதியக்காரருக்கான பணிக்கொடை

இ) குடும்ப ஓய்வூதியம்

ஈ) சிறப்பு சேமநலநிதி- மற்றும்-பணிக்கொடைத் திட்டம்

உ) இறுதிக்கட்ட விடுப்பு சம்பளம்

ஊ) ஒரு பகுதி ஓய்வூதியத்தைப் பணமாக மாற்றிப்பெறும் திட்டம்

எ) சொந்த காரணங்களுக்காக எடுக்கும் விடுப்பைப் பணமாகத் தருதல் (50%) யூஈஎல் 1/2 சம்பளம்.

ஏ) பொது சேமநலநிதியினை இறுதியாக முடிவு செய்தல்

ஐ) அரசு ஓய்வூதியம் பெறுவோர் மருத்துவ நிதித் திட்டம்

ஒ) விருப்ப ஓய்வுபெறும் திட்டம்.

2) அ) வயது முதிர்வு ஓய்வூதியம்

அரசு ஊழியர் ஒருவர் தமது 58 வயது நிறைவடையும்போது ஓய்வு பெறுகிறார். ஓய்வூதியத்தின் முழுச்சலுகைகளையும் பெற வேண்டுமெனில் இவர் 30 ஆண்டுகள் பணிபுரிந்திருத்தல் வேண்டும். 30 ஆண்டுகளுக்குக் குறைவாக பணி

புரிந்திருப்பின், 10 ஆண்டுகளோ அல்லது அதற்கு மேலோ, ஆனால் 30 ஆண்டுகள் பணிக்கு குறைவாக செய்திருப்பின் ஆறு மாத கால அடிப்படையில் நிர்ணயிக்கப்படும். ஓய்வூதியத் தொகையின் குறைந்தபட்ச தொகை மாதமொன்றுக்கு ரூ.1,275/-. அதிகபட்சத் தொகைக்கு வரம்பு இல்லை.

**ஆ. இறந்துவிடுவோர் ஓய்வூதியக்காரர்களுக்கான பணிக்கொடை.**

இது ஒரு ஒட்டுமொத்தத் தொகையாகும். இத்தொகை, ஒவ்வொரு முடிவுற்ற ஆறுமாத காலத்திற்கும், கடைசியாக பெற்ற சம்பளத்தில் ஒரே சீராக நான்கில் ஒரு பங்காக எடுத்துக் கொள்ளப்பட்டு, அதே சமயத்தில் அத்தொகை கடைசியாகபெற்ற சம்பளத்தில் 16½ மடங்குக்கு மேலாகாமல் வழங்கப்படும் வகையில் கணக்கிடப்படும். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சத் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பணிக்கொடை பெற வேண்டும் என்றால் ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்பது விதியாக இருப்பினும், இறந்து விடுபவர்களுக்கு இது விதிவிலக்காகும். இதனைக் கணக்கிடும் முறை ஒட்டு மொத்த தொகையாகப் பெறும் வகையில் மத்திய அரசில் உள்ளதுபோல் மாற்றியமைக்கப்பட உள்ளது.

**இ) பணியில் இருக்கும் போது இறக்கும் ஊழியர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்ச பணிக்கொடை.**

| | | |
|---|---|---|
| ஓராண்டுக்குக் குறைவாக பணி யாற்றியிருந்தால் | = | கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் இரு மடங்கு |
| ஓராண்டுக்கு மேல் ஆனால் ஐந்து வருடங்களுக்கு கீழ் | = | கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் ஆறு மடங்கு |
| ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு மேலும் | = | கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் பன்னிரண்டு மடங்கு |

3. குடும்ப ஓய்வூதியம்.

1) ஓய்வூதியம் பெறத்தக்க பணியில் இருக்கும் ஒருவர் இறந்துவிடின் அவர் ஒரு வருடம் தொடர்ந்து பணி செய்திருப்பின் அல்லது ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்த ஒருவர் இறந்து விட்டால் அவரது குடும்பத்திற்கு வழங்க ஆணையிடப்படும்.

2) ஒருவர் தமது பணிக்காலத்தில் இறந்து விட்டாலோ அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டாலோ, இறந்த மறு தேதியிலிருந்து அவரது மனைவி/கணவனுக்கு இது வழங்கப்படுகிறது. இதனைப் பெறுபவர் அவர்கள் தாங்கள் இறக்கும் வரையில் அல்லது மறுமணம் செய்து கொள்ளும் வரையில் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

3) இறந்து போனவரின் கணவன்/மனைவி, இல்லையென்றால், அவரது மகன்கள், திருமணம் ஆகாத மகள்கள் இச்சலுகையைப் பெற தகுதியுடையவர்கள். ஆனால் இவர்கள் தம் 25வது வயது வரை மட்டுமே இதைப் பெற முடியும்.

குடும்ப ஓய்வூதியம்

குறைந்த பட்சம் (மாதமொன்றுக்கு) - ரூ.1275/-

4) இறந்தவர் ஏழு ஆண்டுகாலத்திற்குக் குறையாமல் தொடர்ந்து பணிபுரிந்திருந்தால் அவர் கடைசியாகப் பெற்ற சம்பள அளவில் இருந்து 50% இறந்த மறு தேதியிலிருந்து 7 ஆண்டுகளுக்கு அல்லது இவர் 58 வயதை அடையும் வரை வழங்கப்படும். இத்தொகையின் குறைந்த அளவு ரூ.1275/- ஆகும்.

## 4. சிறப்பு பொது வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை

இத்திட்டம் 1.4.84 முதல் அமலுக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், அனைத்து அரசு ஊழியர்களும் (நிரந்தரப் பணியாளர்கள்) பலனடைய உரிமை உடையவர்களாவர்.

பணியாளரின் சம்பளத்திலிருந்து 148 மாதங்களுக்கோ அல்லது அவரது ஓய்வுபெறும் நாளுக்கு ஒரு மாதம் முன்பாகவோ இரண்டில் எது முன் வருகிறதோ அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணியாளர்களின் மாதச் சம்பளத்திலிருந்து மாதந்தோரும் ரூ.20/- பிடித்தம் செய்யப்படும். இவ்வாறு பிடித்தம் செய்யப்படும் சந்தா தொகை ரூ.5,000/-ஐ அடையும் வரையில் அதற்கு 10 சதவீதம் வட்டியும், அதன்பிறகு பொது வைப்பு நிதிக்கு வழங்கப்படுவது போன்று 12 சதவீதம் வட்டியும் வழங்கப்படும். ஓய்வு பெறும் போது, இச்சந்தா தொகையும், அதற்குண்டான வட்டித் தொகையும், அரசின் பங்குத்தொகையாக ரூ.5,000/-மும் சேர்த்து பணியாளர்களுக்கு வழங்கப்படும். விருப்ப ஓய்வு, மருத்துவ ரீதியாக பணியாற்ற முடியாமல் மற்றும் கட்டாய ஓய்வு அல்லது மரணமடைதல் ஆகியவற்றின் போது கட்டிய சந்தாத் தொகையும், அதற்குண்டான வட்டியும் மட்டுமே வழங்கப்படும்.

## 5. இறுதிகட்ட விடுப்பு சம்பளம்

பணி ஓய்வு காலத்தில் மற்றும் விருப்ப ஓய்வு அல்லது பணியிலிருக்கும் போது மரணமடைந்தால் அரசு ஊழியர்கள் அவர்களது கணக்கிலுள்ள விடுப்பிலிருந்து அதிக பட்சமாக 240 நாட்களுக்கு தங்களது விடுப்பைப் பணமாக்கிக் கொள்வதற்குத் தகுதி உடையவர்களாவர். எனினும், வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப்படி ஆகியன இதில் முதல் 180 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

6. ஓய்வூதியத்தில் ஒரு பகுதியைப் பணமாக மாற்றிப் பெறும் திட்டம்.

இத்திட்டத்தின் மூலம், அரசு ஊழியர்கள் தங்களது ஓய்வூதியத்திலிருந்து ஒரு பகுதியை அரசுக்கு அளித்து அதற்குப் பதிலாக ரொக்கமாக பெற்றுக்கொள்ள தகுதி உடையவராவர். இதன்மூலம் ஒரு ஒட்டுமொத்த தொகையை அரசு ஊழியர்கள் பெறலாம். ஓய்வூதியத்திற்காக விண்ணபிக்கும்போது, இவ்வாறு பணமாக மாற்றிப் பெறும் முறைக்காகவும் விண்ணப்பிக்கலாம்.

ஓய்வூதியத்தில், மூன்றில் ஒரு பகுதியை மட்டுமே அதிக அளவாகக் கொடுத்து பணமாகப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம், இவ்வாறு ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி மொத்தமாக ஒரு தொகையைப் பெற்ற பின் அதற்கேற்றாற்போல் ஊழியரின் ஓய்வூதியத் தொகை குறைத்து வழங்கப்படும்.

ஓய்வூதியம் வழங்கல் ஆணை பெறப்பட்ட தினத்தில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் அரசு ஊழியராக இருந்தவர் ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைக் கொடுத்து பணமாகப் பெற விரும்பினால், அவர்களுக்கு மருத்துவரின் சோதனைக்கு செல்ல வேண்டுமென்ற தேவையில்லை. பணியில் இருந்து ஓய்வு பெற்று ஒரு வருட காலத்திற்குப் பின் இவ்வாறு ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைக் கொடுக்க விரும்பினால் அவர்கள் மருத்துவரின் சோதனைக்கு, அந்தத் தொகை வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்படும் முன்பாக செல்லவேண்டும்.

இவ்வாறு ஓய்வூதியத்தின் ஒரு பகுதியைப் பணமாக கொடுத்தபின், 15 வருடங்களுக்குப் பிறகு ஓய்வூதியம் பெறுபவரின், விண்ணப்பம் ஏதுமின்றி, அவருக்கு ஓய்வூதியம் முழுமையாக வழங்கப்படும்.

7. சொந்த காரணங்களுக்காக எடுக்கும் விடுப்பை பணமாக்கிக் கொள்ளுதல்

ஓய்வுபெறும் காலத்தில், ஊழியரின் இருப்புக்கணக்கிலுள்ள சொந்த காரணங்களுக்கான 1/2 சம்பள விடுப்பில் 50 சதவீதத்திலிருந்து, அதிகபட்சமாக 90 நாட்களுக்கான முழு விடுப்பு சம்பளத்தை ரொக்கமாகப் பெறுவதற்குத் தகுதி உடையவர்களாவர்.

8. பொது வைப்பு நிதி தொகையை இறுதியாகப் பெறுதல்

பணியிலிருந்து ஓய்வு பெறும் ஊழியர்கள் தங்களது ஓய்வு பெறும் தேதிக்கு ஒரு வருடம் முன்பாக, தங்களது பொது வைப்பு நிதியில் இறுதித் தொகையைப் பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

பணியிலிருக்கும்போதே மரணமடைந்தால், அவர்களது பொது வைப்புநிதி தொகையானது 5 வாரத்திற்குள் முழுமையாக பணியாளரின் குடும்பத்திற்கு வழங்கப்படவேண்டும்.

9. தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் மருத்துவ நல நிதி திட்டம்.

இத்திட்டத்தின் கீழ், அனைத்து ஓய்வு பெற்ற அலுவலர்களும் பயனடைய தகுதியுடையவராவர். அவர்களது ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ரூ.5/- இத்திட்டத்திற்காக பிடித்தம் செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ், பெரிய அளவிலான நோய்களின் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு ரூ.50,000/- வரை, அதிகபட்ச தொகையாக வழங்கப்படும். இந்த நிதி உதவி பெறுவதற்கு உரிய விண்ணப்பத்தை ஓய்வூதியம் வழங்கிடும் அதிகாரிக்குப் பரிசீலனை மற்றும் வழங்கல் ஆணைக்காக அனுப்பிட வேண்டும்.

10. விருப்ப ஓய்வுபெறும் திட்டம்.

20 வருட காலம் பணிக்காலத்தை முடித்துள்ளதுடன், 50 வயதை அடைந்த அரசு ஊழியர்கள், அனைத்து ஓய்வு கால சலுகைகளுடன் தானாக முன் வந்து விருப்பஓய்வு பெற அனுமதிக்கப்படுவர். இது குறித்து, சம்பந்தப்பட்ட அரசு ஊழியர் தன்னுடைய பணி நியமன அதிகாரிக்கு மூன்று மாதத்திற்கு முன்பாக உரிய அறிவிப்பை, எழுத்து வடிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும், அத்துடன் அதனுடைய நகல் ஒன்றை தன்னுடைய உடனடி மேலதிகாரிக்கும் அளிக்க வேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் அறிவிப்பு விண்ணப்பம், பணிநியமன அதிகாரியால் பெறப்பட்ட தேதியில் இருந்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு அந்த அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒப்பளிக்கப்படல் வேண்டும். மேற்கூறிய, முன்னதாக விருப்ப ஓய்வு பெறும் விண்ணப்பத்தை அந்த அரசு ஊழியர் திரும்பப் பெற விரும்பினால், அந்த அறிவிப்பு விண்ணப்பத்திற்கான காலக் கெடு முடிவதற்குள் திரும்பப் பெற வேண்டும். அவ்வாறு ஓய்வு பெற விரும்பும் ஊழியரின் பணியாற்றிய மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பணிக்காலத்துடன் கூடுதலாக 5 ஆண்டுகள் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். அவ்வாறு வழங்கப்படும் 5 ஆண்டு காலமானது, அந்த அரசு ஊழியரின் ஓய்வு பெறும் தேதிக்குப் பின்னால் செல்லாமலும், அதே போல் அவரது பணிக்காலமானது 33 வருடங்களைத் தாண்டிச் செல்லாமலும் இருக்கும் வகையில் அமைந்திட வேண்டும்.

11. அரசு ஊழியர்களாக இருந்து ஓய்வு
பெற்றவர்களுக்கு பயணப் படி வழங்குதல்.

அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெறும் அல்லது தானாக முன்வந்து விருப்ப ஓய்வு பெறும் அரசு ஊழியர்கள், தனது சொந்த ஊருக்குச் சென்று தனது குடும்பத்தாருடன் குடியமர இடமாற்றலின் போது வழங்குவது போன்ற பயணப்படியானது அவர் கடைசியாகப்

பணியாற்றிய இடத்திலிருந்து பெறுவதற்கும், அவரது சொந்தப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் தகுதியுடையவராவர். எனினும், பணியிலிருந்து பணித்துறவு - செய்த நீக்கப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட பணியாளர்கள் எவரும் இந்தப் பயணப்படிக்குத் தகுதியுடையவர்கள் அல்ல.

# 8. பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இறந்து விட்டால் அளிக்கப்படும் சலுகைகள்.

குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை, சிறப்பு பொது வைப்பு நிதி, இறுதிக்கட்ட விடுப்புச் சம்பளம், சொந்தக் காரணங்களுக்காக இருக்கும் விடுப்பை பணமாகப் பெறுதல், மற்றும் பொது வைப்பு நிதியை இறுதியாக முடிவு செய்தல் போன்ற சலுகைகள் அல்லாமல், இறந்தவரின் குடும்பத்தினர் பின்குறிப்பிடப்படும் சலுகைகளுக்கும் உரியவர்களாவார்கள்.

## 1. பணியிலிருக்கும் அரசு ஊழியர் இறந்தால், அவரது பிரேதத்தை எடுத்துச் செல்லுதல்.

பணியிலிருக்கும் அரசு ஊழியர் இறந்தால் (விடுப்பு, தற்காலிக வேலை நீக்கம் அல்லது சுற்றுப்பயணம் உள்ளிட்ட) அவருடைய பிரேதத்தை, இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களின் விருப்பப்படி, இறந்தவரின் இருப்பிடத்திற்கோ, இடுகாட்டிற்கோ, சொந்த ஊருக்கோ, அரசு செலவில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். இதற்கு அரசு துறை வாகனங்களைப் பயன்படுத்தலாம். அவ்வாறு வாகனங்கள் உடனடியாக கிடைக்கவில்லை என்றால், இதற்காக அரசு செலவில் ஒரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகம் மற்றும் கேரளம் போன்ற மாநிலங்களில் ஏதேனும் ஒரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் இந்தச் சலுகை பொருந்தும்.

## 2. பணியிலிருக்கும் அரசு ஊழியர் இறந்தால், அவருடைய குடும்பத்தினர் உடனடி தேவைகளை சமாளிக்க முன்பணம்.

அரசு ஆணை எண்.217 நிதி (ஓய்வூதியம்) துறை நாள். 24-04-97ன் படி பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இறந்தால், அவர்களின் குடும்பத் தேவையை சமாளிக்க ரூ.5,000/-

முன்பணமாகப் பெற அவர்களது குடும்பத்தினர், தகுதியுள்ளவர்கள். இந்த முன்பணம், தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நல நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியிலிருந்து முழுமையாகப் பிடிக்கப்படும்.

**3. பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இறந்து விட்டால், அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு பயணப்படி.**

அரசு ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள், அரசு ஊழியர் பணியிலிருக்கும் போது இறந்தாலோ, அல்லது, ஓய்வு பெற்றவுடன், சொந்த ஊருக்குச் செல்ல பயணம் மேற்கொள்வதற்கு முன்பு அல்லது குடியேற உத்தேசித்துள்ள இடத்திற்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்போ இறந்தாலோ பயணப்படிக்குத் தகுதியுள்ளவர்கள்.

**4. கல்விச் சலுகைகள்.**

பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இறந்தால், அவர்களின் குழந்தைகள், அந்தக் குடும்பத்தினரின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொள்ளாமல், பின்குறிப்பிடப்படும் சலுகைகளுக்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

(1) இறந்த அரசு ஊழியர்களின் குழந்தைகள் பட்டம் பெறுகின்ற வரை, பெண் குழந்தைகளாக இருந்தால் திருமணம் நடைபெறுகிற வரை, இவை இரண்டில் எது முன்னதாக நடைபெறுகிறதோ, அதைக் கணக்கில் கொண்டு, கட்டணங்களை மற்றும் சிறப்புக் கட்டணங்களை அரசு ஏற்கும்.

(2) தங்கும் விடுதிக் கட்டணங்கள்.

(குறிப்பு: இத்திட்டத்தில், மாவட்டக் கல்வி அதிகாரி, தொழிற் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி நிலையங்களின் அதிகாரிகள், இச்சலுகைகளை வழங்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளனர்)

5. மருத்துவ சலுகைகள்.

மரணம் அடைந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வருமானம் ஈட்டுபவர்கள் ஆனாலோ அல்லது பெண்களாக இருந்தால் அவர்களுக்குத் திருமணம் ஆகும் வரையிலும் அல்லது இறந்தவர் அவர் ஓய்வு அடையும் காலம் வரை தொடர்ந்து பணியில் நீடித்து இருந்தால் இம்மூன்றில் எது முன்னதாக வருகிறதோ அதை கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த அரசு ஊழியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அவர்களது விருப்பத்தின் அடிப்படையில், மருத்துவ சலுகைகளுக்கு தகுதியுடையவர்களாவர். விருப்பம் எதுவும் கொடுக்கப்படாவிடில், ஓய்வூதியத்துடன் மாதாமாதம் ரூ.15/- வழங்கப்படுகிறது.

6. தமிழ்நாடு அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்பு நல நிதி.

14.8.96 நாளிட்ட அரசு நிதி (ஓய்வூதியம்)துறை எண்.501 ன் படி நாள்.1.7.96 முதல் இறந்த அரசு ஊழியரின் குடும்பம், ஒட்டுமொத்தமாக ரூ.1,00,000/- பெறுவதற்குத் தகுதியுடையதாகிறது. உடனடி நிவாரணமாக ரூ.5,000/- வழங்கப்பட்டிருந்தால், அப்பணம், இந்நிதியிலிருந்து முழுமையாகப் பிடிக்கப்படும். அரசு ஊழியர் ஒவ்வொருவரிடமிருந்தும், ஒவ்வொரு மாதமும் ரூ.20/- சந்தாவாக பிடித்தம் செய்யப்படுகிறது. இந்நிதியை ஆணையிடும் அதிகாரி, அந்தந்த அலுவலகத்தின் தலைவர் ஆவார். தற்கொலை மற்றும் கொலை போன்ற இறப்புகளுக்கு நிதி வழங்க அரசின் அனுமதி தேவை.

7. கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்தல்.

பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள், தங்கள் குடும்பத்தை ஆதரவற்ற நிலையில் விட்டுவிட்டு இறந்தால், அக்குடும்ப உறுப்பினர்களுக்கு பின்வரும் முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணி நியமன உதவிகள் வழங்கப்படுகின்றன.

1) அரசு ஊழியர் இறந்து 3 வருடங்களுக்குள், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி விண்ணப்பம் கொடுக்கப்பட வேண்டும்.

2) இப்பணி நியமனங்களுக்கு, இறந்தவரின் விதவைகளுக்கு உயர்த்தப்பட்ட வயது வரம்பு 50 என்றும், மகள்/ மகன்களுக்கு 30 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச வயது வரம்பு விதிக்கப்படவில்லையென்றாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

3) இதற்கான விண்ணப்பத்தை, சம்பந்தப்பட்ட நபர், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்ய, இறந்தவர் கடைசியாக பணியாற்றிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

4) இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் உள்ள நபர் எவரேனும் ஏற்கனவே வருமானம் ஈட்டும் பணியிலிருந்தால் இந்தச் சலுகை பொருந்தாது.

5) மருத்துவ ரீதியாக செயல்பட முடியாதவர் என்று அறிவிக்கப்பட்டு, 50 வயது அடைவதற்கு முன்னர் அரசாங்கத்திலிருந்து ஓய்வு அளிக்கப்பட்ட அரசு ஊழியர் குடும்பத்திற்கும் இச்சலுகை பொருந்தும்.

6) தற்கொலை செய்து கொண்டவர்கள் அல்லது கொலை செய்யப்பட்ட அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் இச் சலுகை பொருந்தும்.

7) ஓய்வு பெற்ற பின்னர் இறக்கும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு இச்சலுகை பொருந்தாது.

8) இத்திட்டத்தின்கீழ், பணி நியமனம் கோரும் விண்ணப்பதாரர்கள்,எந்தப் பதவிக்காக விண்ணப்பிக்கின்றார்களோ அதற்குரிய நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும், அதனை தனிப்பட்ட வகையில் தளர்த்த முடியாது.

9) கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பத்தில், கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் உண்மை என்றும், பிற்காலத்தில் அவைகள் பொய் என்றோ, தவறு என்றோ கண்டுபிடிக்கப்பட்டால், தன்னை பணியிலிருந்து நீக்கலாம் என்றும் உறுதிமொழி அளிக்க வேண்டும்.

10) தமிழ்நாடு தேர்வு ஆணையத்தின் வரம்பிற்குட்பட்ட பதவிகளுக்குத் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டு, பின்னர் தேர்வாணையத்தின் குறிப்பிட்ட இசைவு பெறப்பட்டு, பின் பணி நிரந்தரம் செய்யப்படுகிறது.

11) இதுவரை காவல்துறையில் 1975 முதல் 1997 வரை 2,079 நபர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். 1998ல் 95 பேர் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது 328 பேர் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர். மேலும் 21.2.90 நாளிட்ட உள்துறை அரசு ஆணை எண் 332ன் படி கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களில் தகுதியானவர்களை காவலர்களாகவும், உதவி ஆய்வாளர்களாகவும் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 9) வீர தீரச் செயல் புரிந்து மரணம் அடைந்தவர் குடும்பத்திற்கு அளிக்கப்படும் சலுகைகள் :-

பணிக்காலத்தில் வீரதீரச் செயல்களினால் மரணம் அடையும் காவலர் குடும்பங்களுக்கு அத்தியாயாம் 8ல் குறிப்பிட்டுள்ள சலுகைகளோடு கீழ்வரும் சிறப்புச்சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

அ) பணியிலிருக்கும்போது வீரச் செயல்புரிந்து இறந்து விட்டால், அவரது குடும்பத்திற்கு, அவர் உயிருடன் இருக்கும்போது கடைசியாகப் பெற்ற சம்பளம், அவர் உயிருடன் இருந்து ஓய்வுபெறும் தேதி வரை, குடும்ப ஓய்வூதியமாகவும் பின்னர் நடைமுறையிலுள்ள விகிதங்களின்படி குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கும் இறந்தவரின் குடும்பத்தார் தகுதியுள்ளவர்களாகிறார்கள். (அரசு ஆணை எண் 454 உள்துறை நாள் 17.3.92.)

ஆ) மரணமடைந்த காவலரின் குடும்பத்திற்கு கருணைத்தொகை ரூ.2 இலட்சம் வழங்கப்படும். (அரசு ஆணை எண் 845 உள்துறை நாள் 3.6.97.)

இ) காப்பீட்டுத் திட்டத்தின்படி ரூபாய் ஒரு இலட்சம் இழப்பீட்டுத்தொகையாக வழங்கப்படும்.

ஈ) தமிழ்நாடு குடும்பப் பாதுகாப்பு நலநிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படும். (உடனடி நிவாரணம் ரூ.5,000/- வழங்கப்பட்டிருந்தால் இந்நிதியிலிருந்து முழுமையாக பிடிக்கப்படும்.)

உ) பணிக்காலத்தில் வீரதீரச்செயல் புரிந்து அகால மரணமடைந்த காவல்துறையைச் சார்ந்தவர்களின் வீட்டுப்பிள்ளைகளுக்கென மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை ஆகிய படிப்புகளில் சேர, தலா மூன்று இடங்களும் சட்டப்படிப்புக்கென இரண்டு இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஊ) தமிழ்நாடு காவல்துறை நலநிதி சந்தாதாரராக இருப்பின் மரணமடைந்த நாளிலிருந்து தொடர்ந்து 5 ஆண்டுகள் வரை அவரது குடும்பத்தினர்க்கு தகுதியின் அடிப்படையில் இந்நிதியிலிருந்து மருத்துவம் மற்றும் கல்விக்கு நிதி உதவிகள் வழங்கப்படும்.

**26.8.96 அன்று சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள்.**

| | |
|---|---|
| 1. | 1976இல் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்ட 329 உதவியாளர்கள் கண்காணிப்பாளர்களாக தரம் உயர்த்தப்படுவார்கள். |
| 2, | சீருடைப்படி மாதந்தோறும் ரூ.25/- வழங்கப்படுகிறது. ரூ.30/- ஆக உயர்த்தி வழங்கப்படும். |
| 3. | ஓட்டுநர்களின் தனி ஊதியம் ரூ.20/-லிருந்து ரூ.40/- ஆக உயர்த்தப்படும். |
| 4. | திறமைக்கான ஊதியம் காவலர்களுக்கு ரூ.3/- லிருந்து ரூ.10/- ஆக உயர்த்தப்படும். |
| 5. | தமிழ்நாடு காவல் நலத் திட்டத்தில் காவல் பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களும் சேர்க்கப்படுவார்கள். |
| 6. | வேலூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகமும், சரக காவல்துறைத் துணைத் தலைவர் அலுவலகமும் கட்டப்படும். |
| 7. | வீடு கட்ட வழங்கப்படும் முன்பணம் ரூ.1 கோடியிலிருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்படும். |
| 8. | 15 ஆண்டுகள் பணி முடித்த பெண் காவலர்கள், தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்தப்படுவார்கள். |
| 9. | காவலர்கள் நற்பணிக்கு சிறப்புப்படி மாதந்தோறும் பின்வருமாறு வழங்கப்படும்.<br>அ) 15 வருடங்கள் - ரூ.5/-<br>ஆ) 20 வருடங்கள் - ரூ.7.50<br>இ) 25 வருடங்கள் - ரூ.10/-<br>ஈ) 30 வருடங்கள் - ரூ.15/-<br>உ) 35 வருடங்கள் - ரூ.20/- |
| 10. | ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 1989ம் வருடம் பணியமர்த்தப்பட்ட 395 பேரில் மீதமுள்ள 85 பேர்கள் தகுந்த பயிற்சிக்கு பின்னர் சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்றப்படுவார்கள். |

| | |
|---|---|
| 11. | காவலர் பதவியில் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்காக 434 காலியிடங்களும் உடனடியாக நிரப்பப்படும். |
| 12. | 1989ல் தேர்வு செய்யப்பட்ட 2,000 காவலர்களில் 350 பேர் நீதிமன்றத்தை அணுகியதால் பணியமர்த்தப்பட்டனர். மீதமுள்ள 1650 பேர்கள் அரசை அணுகியதால் தேவைப்பட்ட விதிகளைத் தளர்த்தி வாய்ப்பு அளிக்கப்படும். |
| 13. | காவலர்கள்/உதவி ஆய்வாளர்கள் 5000 பேர்கள் நடப்பாண்டில் தேர்வு செய்யப்படுவார்கள். |
| 14. | 12 புறக் காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும். |
| 15. | பெண் காவலர்கட்கு சீருடை மாற்றப்படும். |
| 16. | மெரினா கடற்கரையில் காவல் அலுவலகம் கட்டப்படும். |
| 17. | காவல் குழுவின் மீதமுள்ள 66 பரிந்துரைகள் அமலாக்கப்படும். |
| 18. | கள்ளச் சாராயத்தை ஒழிப்பவர்களுக்கு உத்தமர் காந்தி மெடல் வழங்கப்படும். |
| 19. | சிறப்பு பாதுகாப்புப் பிரிவை நீக்கிவிட்டு அவர்களை மற்ற காவல் பிரிவிற்கு மாற்றப்படும். |
| 20. | கலால் பிரிவு நீக்கப்படும். |
| 21. | காட்டிலாகா குற்றப்பிரிவு நீக்கப்பட்டு அவர்கள் காவல்துறையில் பணியமர்த்தப்படுவர். |

25.4.1997 அன்று சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள்.

| வ எண் | அறிவிப்புகள் | அரசு ஆணை எண் மற்றும் நாள் |
|---|---|---|
| 1. | இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 80 கோடி ரூபாய் செலவில் இனிமேல் 1500 குடியிருப்புகளுக்கு பதிலாக 2500 குடியிருப்புகள் வீதம் காவல் பணியாளர்களுக்கென்று தரப்படும். | (அரசு ஆணை எண்.35 உள் (காவல் .10) துறை நாள் 9.1.98.) |
| 2. | தமிழ்நாட்டில் 98 இடங்களில் உள்ள 2751 காவலர் குடியிருப்புகளில் எல்லா காவல் குடியிருப்புகளுக்கும் ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில், நவீன கழிப்பிட வசதிகள் செய்து தரப்படும். | (அரசு ஆணை எண்.884, உள்துறை நாள் 12.6.97) |
| 3. | தமிழ்நாடு சிறப்புக்காவல் அணிக்கு தற்போது வழங்கப்படும் உணவு முன்பணம் ரூ.5,000/-லிருந்து ரூ.25,000/- ஆக நடப்பாண்டில் இருந்து உயர்த்தி தரப்படும். | (அரசு ஆணை எண்.972, உள்துறை(காவல்.9) நாள் 27.6.97) |

| | | |
|---|---|---|
| 4. | தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுப்படி, இரண்டாம் நிலை காவலர்களுக்கு ரூ.16/-ல் இருந்து ரூ.25/- ஆகவும், தலைமைக் காவலர்/முதல்நிலை காவலர்களுக்கு ரூ.20/- லிருந்து ரூ.30/- ஆகவும், ஆய்வாளர்/உதவி ஆய்வாளர் ஆகியோர்களுக்கு ரூ.30/-ல் இருந்து ரூ.45/- ஆகவும் உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண்.808, உள்துறை நாள் 27.05.97) |
| 5. | காவலர்களுக்கு தற்போது வழங்கப் படும் உணவு மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகை, துவரம் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.4/-ல் இருந்து இனிமேல் ரூ.10/- ஆக உயர்த்தப்படும். உளுத்தம் பருப்புக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.3/-ல் இருந்து இனிமேல் ரூ.10/- ஆக உயர்த்தப்படும். ரவை, மைதாவுக்கு தற்போது உள்ள ரூ.1.50 என்பது ரூ.3/- ஆக உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண்.806, உள்துறை நாள் 27.5.97) |
| 6. | காவல் துறையில் உள்ள 80 ஆயிரம் பேர்களுக்கு குடும்ப அட்டைகள் புதிதாக வழங்கப்படும். இந்த அட்டைகளைப் பயன்படுத்தி ரேஷன் கடைகளில் தற்போது பொது மக்களுக்கு மான்ய விலையில் மண்ணெண்ணை வழங்குவது போல பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படும். | (அரசு ஆணை எண்.157, கூட்டுறவுத்துறை நாள் 8.6.97) |

| | | |
|---|---|---|
| 7. | தமிழ்நாடு காவலர் நலநிதிக்கு மான்யத் தொகை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண்.874, உள்துறை(காவல்.9) நாள் 11.6.97) |
| 8. | தமிழ்நாடு காவல்துறை இசைக்குழு (Police Band) பாண்டு மாஸ்டருக்கு சிறப்பூதியம் ரூ.50/- இனிமேல் ரூ.100/- ஆக வழங்கப்படும். உதவி பாண்டு மாஸ்டருக்கு ரூ.25/-லிருந்து ரூ.75/-ஆக உயர்த்தப்படும். தலைமைக் காவலர்/ அவில்தார்களுக்கு ரூ.25/- லிருந்து ரூ.60/- ஆக வழங்கப்படும். காவலர் நாயக், லான்ஸ் நாயக் ஆகியோருக்கு ரூ.15/- லிருந்து ரூ.40/- ஆக வழங்கப்படும். | (அரசு ஆணை எண்.977, உள்துறை நாள் 30.6.97) |
| 9. | தமிழ்நாடு முதலமைச்சர் காவல் பதக்கம் பெற்றவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திரப் படி இப்போது ரூ.20/- என்பது இனிமேல் ரூ.40/-ஆக உயர்த்தப்படும். உள்ளூர் தலைமைக் காவலர் மாதப்படி ரூ.25/-லிருந்து ரூ.50/-ஆகவும் ஆயுதப்படை நாயக் / தலைமைக் காவலர் மாதப்படி ரூ.25/-லிருந்து ரூ.50/-ஆகவும், தமிழ்நாடு சிறப்புக் காவல் நாயக்/அவில்தார் மாதப்படி ரூ.25/- லிருந்து ரூ.50/- ஆகவும் உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண்.834, உள்துறை நாள் 2.6.97) |

| | | |
|---|---|---|
| 10. | வீரதீரச் செயல்களில் -<br>(1) மரணம் அடைந்த காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.1 இலட்சத்தில் இருந்து ரூபாய் 2 இலட்சமாக வழங்கப்படும்.<br><br>(2) செயல்பட முடியாத அளவிற்கு நிரந்தர ஊனம் அடைந்தவர்களுக்கு வழங்கப்பட்ட ரூ.20,000/-ம் ரூ.50,000/- ஆக உயர்த்தப்படும்.<br><br>(3) படுகாயம் அடைந்தோருக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த ரூ.5,000/- இனிமேல் ரூ.10,000/- ஆக உயர்த்தப்படும்.<br><br>(4) சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட ரூ.3,000/- இனிமேல் ரூ.5,000/- ஆக உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண்.845, உள்துறை(காவல்.) நாள் 3.6.97) |
| 11. | 10 சிறப்புக் காவல் அணிகளிலும் மற்றும் ஒரு படைப்பயிற்சி மையத்திலும் 90 நாயக்குகள் பதவிகள் அவில்தார் பதவி நிலையில் உயர்த்தப்படும். | அரசு ஆணை எண்.995 உள்துறை நாள் 4.7.97 |

| | | |
|---|---|---|
| 12. | 15 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு, திங்கள் ஒன்றுக்கு தரப்படுகின்ற சிறப்புப்படி ரூ.5/-ல் இருந்து ரூ.15/- ஆகவும், 20 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ.7.50/-லிருந்து ரூ.20/- ஆகவும், 25 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ.10/-லிருந்து ரூ.25/- ஆகவும், 30 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு ரூ.15/-லிருந்து ரூ.30/- ஆகவும், 35 ஆண்டுகள் நற்பணி முடித்த காவலர்களுக்கு தற்போது தரப்படுகின்ற சிறப்புப்படி ரூ.20/-லிருந்து ரூ.40/- ஆக உயர்த்தி, கடைசிவரை நற்பணி முடித்தவர்களுக்கு வழங்கப்படும். | (அரசு ஆணை எண்.873, உள்துறை நாள் 11.6.97) |
| 13. | 15 ஆண்டுகாலம் பணியாற்றி பதவி உயர்வு கிடைக்காமல் உள்ள காவலர்களை ஊக்கப் படுத்தவும் அவர்களுடைய பணித்திறனை மேம்படுத்தவும் மகளிர் காவலர்களுக்கு பதவி உயர்வு அளித்தது போல ஆண் காவலர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க முடிவு செய்து, 10 ஆண்டுகாலம் பணியாற்றிய இரண்டாம் நிலை காவலர்கள் முதல்நிலை காவலர்களாகவும், 15 ஆண்டுகாலம் முதல்நிலை | (அரசு ஆணை எண்.844, உள்துறை நாள் 3.6.97) |

| | | |
|---|---|---|
| | காவலர்களாக பணியாற்றியவர்கள் தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்தப்படுவர். | |
| 14. | தற்போது தமிழகத்தில் 22,717 காவலர் குடியிருப்புகளில் இதுவரை 8,785 குடியிருப்புகளுக்குத் தனி மின்சார மீட்டர் வைக்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள 13,932 குடியிருப்புகளுக்கும் ஒரேயடியாக தனி மீட்டர் பொருத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது. | (அரசு ஆணை எண்.825, உள்துறை(காவல்.) நாள் 30.5.97) |
| 15. | முதல் கட்டமாக ரூ.15 கோடி செலவில் 79 காவல் நிலைங்களுக்கு, புதிய கட்டடங்கள் இந்த ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குள் கட்டப்படும். | (அரசு ஆணை எண் 841ல் உள் (காவல்.10) துறை நாள் 3.6.97) |
| 16. | கன்னியாகுமரியில் மாவட்ட காவல் அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் ரூ.1 கோடி மதிப்பில் கட்டப்படும். | (அரசு ஆணை எண் 1024ல் உள் (காவல்.10) துறை நாள் 10.7.97) |
| 17. | இந்த ஆண்டு ரூ.2 கோடி செலவில் கோயம்புத்தூரில் காவல் ஆணையர் அலுவலகம் கட்டப்படும். | (அரசு ஆணை எண் 953ல் உள் (காவல்.10) துறை நாள் 25.6.97) |
| 18. | சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றப்பிரிவு அலுவலர்கள் உடனடியாக செயல்படுவதற்கு 105 வாகனங்கள் ரூ.3 கோடி செலவில் வாங்கப்படும். | (அரசு ஆணை எண்.1351 ஃ 1352, உள்துறை (காவல்.11) நாள் 12.9.97) |
| 19. | மதுரை காவல் ஆணையகத்தை வலுவூட்ட மேலும் ஒரு ஆயுதப் படை பிரிவு உருவாக்கப்படும். | (அரசு ஆணை எண் 997, உள்துறை (காவல்.8) நாள் 4.7.97) |

| | | |
|---|---|---|
| 20. | சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அமைக்க ரூ.30 இலட்சம் தொடர் செலவினத்திற்கும் ரூ.5 கோடி தொடராச் செலவினத்திற்கும் வழங்கப்படும். | (அரசு ஆணை எண்.1091,உள்துறை (காவல்.8) நாள் 24.7.97) |
| 21. | காவல்துறை துணைத் தலைவர் தலைமையில் திண்டுக்கல் நகரில் புதிய காவல் சரகம் அமைக்கப்படும் | (அரசு ஆணை எண்.879, உள்துறை (காவல்.14) நாள் 11.6.97) |
| 22. | மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருச்சி, சேலம். திருநெல்வேலி மற்றும் செயின்ட் தாமஸ் மவுண்ட் காவல் ஆணையகங்கள் அமைக்கப்பட்டு 1997ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் முதல் செயல்படும். | (அரசு ஆணை எண்.829, உள்துறை(காவல்.14) நாள் 1.6.97) (அரசு ஆணை எண்.830, உள்துறை(காவல்.14) நாள் 1.6.97) (அரசு ஆணை எண்.831, உள்துறை(காவல்.14) நாள் 1.6.97) |
| 23. | கீழ்க்கண்ட புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்படும்.<br>தூத்துக்குடி மாவட்டம் (தரவைக் குளம், கடல்குடி), விருதுநகர் மாவட்டம் (சூலக்கரை), திருவாரூர் மாவட்டம் (பாமணி), காஞ்சிபுரம் மாவட்டம் (திருநின்றவூர், பொதட்டூர் பேட்டை), வேலூர் மாவட்டம் | (அரசு ஆணை எண்.1033, உள்துறை(காவல்.14) நாள் 11.7.97) |

| | | |
|---|---|---|
| | (தக்கோலம்), விழுப்புரம் மாவட்டம் (திருப்பாலப் பந்தல்), கடலூர் மாவட்டம் (சிறுப்பாக்கம்), திருவள்ளூர் மாவட்டம் கேளம்பாக்கம்) திருநெல்வேலி மாவட்டம் (மூன்றடைப்பு), மதுரை மாவட்டம் (எம்.கல்லுப்பட்டி), திண்டுக்கல் மாவட்டம் (சுவாமிநாதபுரம்), திருவண்ணாமலை மாவட்டம் (வனப்புரம்), கோயம்புத்தூர் மாவட்டம் (செட்டிபாளையம்) | |
| 24. | புதிய காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்படும் இடங்கள் கோயம்புத்தூர் மாவட்டம் (அனுப்பர்பாளையம்), ஈரோடு மாவட்டம் (பவானி போக்குவரத்து காவல் நிலையம்), காஞ்சிபுரம் மாவட்டம் (மானம்பதி, நீலாங்கரை), பெரம்பலூர் மாவட்டம் (இந்தூர்) | (அரசு ஆணை (பல்வகை) எண்.971, உள்துறை(காவல்.14) நாள் 27.6.97) |
| 25. | கன்னியாகுமரி மாவட்டம் கடயாலமூடு என்னும் ஊரில் மூடப்பட்ட புறக்காவல் நிலையம் மீண்டும் முழு அளவிலான காவல் நிலையமாக உருவாக்கப்படும். | (அரசு ஆணை எண்.971, உள்துறை(காவல்.14) நாள் 27.6.97) |
| 26. | சட்டப் பேரவைத் தலைவர் மற்றும் சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளின் படி கீழ்க்கண்ட இடங்களில் புதிய காவல் நிலை-யங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. | (அரசு ஆணை எண்.971, உள்துறை நாள் 27.6.97) |

| | | |
|---|---|---|
| | ஈரோடு மாவட்டம் (வெள்ளோடு), திருவள்ளூர் மாவட்டம் (காட்டுர்) கோயம்புத்தூர் மாவட்டம் (வடவள்ளி), தூத்துக்குடி மாவட்டம் (ஆத்தூர்), மதுரை மாவட்டம் (கே.புதூர்), திருவள்ளூர் மாவட்டம் (திருத்தணி போக்குவரத்துக் காவல் நிலையம்), புதுக்கோட்டை மாவட்டம் (ஜெகதாப்பட்டினம்), விருதுநகர் மாவட்டம் (மல்லான்கிணறு), நாமக்கல் மாவட்டம் (மங்களபுரம்), இராமநாதபுர மாவட்டம் (திருப்புல்லாணி), நாகப்பட்டினம் மாவட்டம் (வைதீஸ்வரன்கோயில்), தூத்துக்குடி மாவட்டம் (நாரைக்கிணறு), கன்னியாகுமரி மாவட்டம் (மண்டைக்காடு), மதுரை மாவட்டம் (கூடலூர்-தெற்கு), சென்னை மாவட்டம் (கொளத்தூர்), பெரம்பலூர் மாவட்டம் (தளவாய்) | |
| 27. | நாமக்கல் மாவட்டம் இராசிபுரத்தில் ஒரு புறக்காவல் நிலையம் அமைக்கப்படும். | **இராசிபுரத்தில் ஏற்கனவே ஒரு காவல் நிலையம் இயங்கிவருவதால் இஃது கைவிடப்பட்டது (அரசு கடித எண் 48857/கா.14/ 97-4 நாள் 22.10.97.)** |

## 25.5.98 அன்று சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட நலத்திட்டங்கள்.

| வ. எண் | அறிவிப்புகள் | அரசு ஆணை எண் மற்றும் நாள் |
|---|---|---|
| 1. | காவல் துறையை வலுப்படுத்தவும் / நவீனப்படுத்தவும் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்படுகிறது. | --- |
| 2. | 20 கோடி செலவில் வண்டலூர் அருகில் 133 ஏக்கர் பரப்பில் காவல் பயிற்சிக் கழகம் உருவாக்கப படுகிறது. அதேபோல், மாவட்ட அளவிலும் பயிற்சிக்கழகங்கள் உருவாக்கப்பட்டு இக்கழகம் அதை ஒருங்கிணைத்து செயல்படும். | ( அரசு ஆணை எண் 173 வருவாய்த்துறை நாள் 14.3.98 ) |
| 3. | நிரந்தரக் காவலா் பயிற்சிப் பள்ளி ரூபாய் 1.8 கோடி செலவில் 3 இடங்களில் நிரந்தர அடிப்படை பயிற்சிப்பள்ளி துவக்கப்படும். | ( அரசு ஆணை எண் 685 உள் (காவல்.11) நாள் 4.7.98 ) |
| 4. | மனித நேயங்கள் பற்றி மாவட்டந்தோறும் பயிலகங்கள் நடத்த முதல் தவணையாக ரூ.10 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. | ( அரச ஆணை எண் 857 உள் (காவல் .11) துறை நாள் 2.7.98 ) |
| 5. | வாடகை கட்டடங்களில் இயங்கும் 40 காவல் நிலையங்களுக்குப் புதியதாக கட்டடங்கள் கட்டப்படும். | ( அரசு ஆணை எண் 811 உள் (காவல்.10) துறை நாள் 22.6.98) |
| 6. | 227 புதிய வாகனங்கள் மற்றும் பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்க ரூ.10.35 கோடி ஒதுக்கப்படும். | ( அரசு ஆணை எண் 1075 உள் (காவல் .11 ) துறை நாள் 7.8.98.) |

| | | |
|---|---|---|
| 7. | ரோந்து பணிக்காக 54 வாகனங்கள் வழங்கப்படும். | ( அரசு ஆணை எண் 1290 உள் (காவல்.11) துறை நாள் 16.9.98 |
| 8. | ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், நாற்காலி அலமாரி வேண்டி மரச்சாமான்கள் வாங்க ரூ.20,000/- ஒதுக்கப்படும். | ( அரசு ஆணை எண் 870 உள் (காவல்.3 ) துறை நாள் 6.7.98 ) |
| 9. | காவல் நிலயத்தில் முன்வைப்புத் தொகை ரூபாய் 5,000/- வழங்கப்படுகிறது. | ( அரசு ஆணை எண் 801 உள்(காவல்.10) துறை நாள் 18.6.98.) |
| 10. | ஆயுதப்படைக்கு முன்பணமாக ரூ.. 10,000/- வழங்கப்படுகிறது. | (அரசு ஆணை எண் நாள் 787 உள் (காவல் 8) துறை நாள் 17.6.98ல் ரூ.3,50,000/- வழங்கப்பட்டது) |
| 11. | நாகை மாவட்ட காவல் அலுவலகம் ரூ. 1.61 இலட்சம் செலவில் கட்டப்படும். | (அரசு ஆணை எண் 893 உள் (காவல் 10) துறை நாள் 9.7.98) |
| 12. | உணவுப்படி காவலருக்கு ரூ.25/- என்பது ரூ.35/- ஆகவும், முதல்நிலை காவலர் தலைமைக் காவலருக்கு ரூ.30/- என்பது ரூ.40/- ஆகவும் உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண் 753 உள் (காவல் 13) துறை நாள் 12.6.98) |
| 13. | மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்குவதில் அரிசி | (அரசு ஆணை எண் 643 உள்(காவல் .12) |

| | | |
|---|---|---|
| | 12 கிலோவிலிருந்து 20 கிலோவாக வழங்கப்படும் | துறை நாள் 2.6.98.) |
| 14. | சலவைப்படி துணைக்காவல் கண்காணிப்பாளர் முதல் கண்காணிப்பாளர் வரை ரூ.40/- லிருந்து ரூ.60/- ஆகவும் உதவி ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரை ரூ.30/- லிருந்து ரூ.50/- ஆகவும், காவலர் முதல் தலைமைக்காவலர் வரை ரூ. 0/- லிருந்து ரூ.40/- ஆகவும் உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண் 786 உள்(காவல் .8) துறை நாள் 17.6.98.) |
| 15. | 1998 -99 ஆம் ஆண்டில் மேலும் 2,500 குடியிருப்புக்கள் கட்ட ரூ. 85 கோடி அனுமதிக்கப்படுகிறது. | ( அரசு ஆணை எண் 332 உள் (காவல் .10 ) துறை நாள் 27.3.98.) |
| 16. | மின்விசிறிகள் இல்லாத 11,140 காவலர் குடியிருப்புக்களுக்கு மின்விசிறி வழங்கப்படும் | (அரசு ஆணை எண் 799 உள்(காவல் .10) துறை நாள் 18.6.98.) |
| 17. | காவலர் குடியிருப்புகளை பழுது பார்க்க ரூபாய் 5 கோடி ஒதுக்கப்படுகிறது. | (அரசு ஆணை எண் 800 உள்(காவல் .10) துறை நாள் 18.6.98.) |
| 18. | தமிழ்நாடு காவலர் மருத்துவ நலநிதிக்கு மான்யம் ரூ.30/- இலட்சத்திலிருந்து ரூ.50/- இலட்சமாக உயர்த்தப் படுகிறது. | (அரசு ஆணை எண் 768 உள்(காவல் .9) துறை நாள் 16.6.98.) |
| 19. | கூடுதல்நேர பணிப்படி ரூ. 20/- லிருந்து ரூ. 50/- ஆக உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண் 785 உள் (காவல் .8 ) துறை நாள் 17.6.98.) |

| | | |
|---|---|---|
| 20. | இடர்ப்படி, காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை ரூ. 20/- லிருந்து ரூ. 50/- ஆகவும் துணைக்காவல் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்க்கு ரூ. 30/- லிருந்து ரூ.60/- ஆகவும் உயர்த்தப்படும். | (அரசு ஆணை எண் 784 உள் (காவல் .8 ) துறை நாள் 17.6.98.) |
| 21. | பத்து ஆண்டுகள் பணி முடித்த தலைமைக் காவலர்களுக்கு சிறப்பு பதவி உயர்வு ( சிறப்பு உதவி ஆய்வாளர் ) அளிக்கப்படும். | (அரசு ஆணை எண் 937 உள் ( காவல் . 3) துறை நாள் 21.7.98.) |
| 22. | புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளுக்கும் அமைச்சுப் பணியாளர்கள் வழங்க கருத்துரு பெறப்பட்டு வழங்கப்படும். | (அரசு ஆணை எண் 927 பல் வகை (காவல் .9) துறை நாள் 17.7.98.) |
| 23. | காவலர் குறைகளைத் தீர்க்க காவல்துறை இயக்குநர் அலுவலகத்திலும் உள்துறை செயலர் அலுவலகத்திலும் குறை கேட்கும் பிரிவு துவக்கப்படும். | (அரசு ஆணை எண் 403 உள் (காவல்.5 ) துறை நாள் 2.4.98.) |
| 24. | மதுவிலக்கு அமல் பிரிவு மீண்டும் தோற்றுவிக்கப்படும். | (அரசு ஆணை எண் 115 உள் (மதுவிலக்கு மற்றும் அமல் ) துறை நாள் 10.6.98.) |
| 25. | 18 புதிய காவல் நிலையங்கள் தோற்றுவிக்கப்படும். | (அரசு ஆணை எண் 879 உள் (காவல் .14) துறை நாள் 8.07.98.) |

# தமிழ்நாடு காவல் - ஒரு கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| 1. | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | 86,090 |
| 2. | காவல் மாவட்டங்களின் எண்ணிக்கை | 31 |
| 3. | காவல் ஆணையர் அலுவலகம் | 6 (சென்னை, மதுரை, கோவை, திருச்சி,. சேலம்,. திருநெல்வேலி |
| 4. | காவல் சரகங்கள் | 10+1 இருப்புப்பாதை சரகம்-1 |
| 5. | உட்கோட்டங்கள் / வட்டங்கள் | 189/246 |
| 6. | காவல் நிலையங்கள் | 1,191 |
| 7. | அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் | 57 |
| 8. | புறக்காவல் நிலையங்கள் | 110 |
| 9. | சிறப்புப் பிரிவுகள் (தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை முதலியன) | 200 |
| 10. | தொலைபேசி வசதியுடைய காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்கள் | காவல் நிலையம் 1,191 புறக்காவல் நிலையம் 109 |
| 11. | தொலைபேசி வசதியுடைய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் | 57 |
| 12. | வி.எச்.எஃப் வசதியுடைய காவல் நிலையங்கள் | 1,191 |

| | | |
|---|---|---|
| 13. | காவல் மானியம்<br>அ)1993-94<br>ஆ)1994-95<br>இ)1995-96<br>ஈ)1996-97<br>உ)1997-98 | <br>ரூ.320.89 கோடி<br>ரூ.387.22 கோடி<br>ரூ.420.07 கோடி<br>ரூ.507.91 கோடி<br>ரூ.539.51 கோடி |
| 14. | காவல் வாகனங்களின் எண்ணிக்கை | 6,026 |
| 15. | தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள் | 12 (ஆவடி படைபயிற்சி மையம் உட்பட) |
| 16. | காவல் பயிற்சி நிலையங்கள்<br>அ) காவல் பயிற்சிக் கல்லூரி<br>ஆ) காவல் பயிற்சிப் பள்ளிகள்<br>இ) தற்காலிக காவல் பயிற்சிப் பள்ளிகள் | 3<br>1<br>2<br>15 |
| 17. | பணியின்போது வீரதீர மரணமடைந்தவர்கள் (1997) | 3 |
| 18. | காவல் மகளிர் எண்ணிக்கை<br><br>துணைக் காவல் கண்காணிப்பாளர்<br>ஆய்வாளர்<br>உதவி ஆய்வாளர்<br>தலைமைக் காவலர்<br>பெண் காவலர்கள்<br>(முதல் நிலைக் காவலர்<br>இரண்டாம் நிலைக் காவலர்) | 2,894<br><br>26<br>72<br>263<br>554<br>1,979<br>548<br>1,431 |
| 19. | கட்டுப்பாட்டு அறைகளின் எண்ணிக்கை | 32 |
| 20. | அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை | 5,640 |

# காவலர் பணி அமைப்பு முறையும் - பதவி உயர்வுகளும்

15 ஆண்டுகள் முதல் நிலைக் காவலர்களாகப் பணியாற்றியோர் எவரும் இல்லாததாலும், அப்பதவியில் அதிக பட்சமாக ஐந்தாண்டுகள் மட்டுமே பணி முடித்தவர் இருப்பதாலும் 15 ஆண்டுகள் முதல்நிலைக் காவலர்களாக பணி ஆற்றியிருக்கவேண்டும் என்ற விதியினை அரசு தளர்த்தி 5 ஆண்டுகள் முதல் நிலைக் காவலர்களாகப் பணியாற்றி இருந்தாலே போதுமானது என திருத்திய ஆணையை 3.6.97 நாளிட்ட உள்துறை அரசு ஆணை எண் 844-ல் வெளியிட்டது.

இதன் மூலம், 1997-98 ஆம் ஆண்டில் 9,000 பேருக்கும் 1998-99 ஆம் ஆண்டில் 4,000 பேருக்கும் 1999-2000-ல் 4,000 பேருக்கும் 2000-2001-ல் மேலும் 4,000 பேருக்கும் ஆக 2001 ஆம் ஆண்டிற்குள் 21,000 முதல் நிலைக்காவலர்கள் தலைமைக் காவலர்களாக பதவி உயர்வு பெறும் சீரியமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு காவலர் பணியில் சேர்ந்து முதுநிலை அடிப்படையில் குறைந்தபட்சம் உதவி ஆய்வாளர் வரை பதவி உயர்வு பெற வழிவகுக்கும் வகையில் காவலர் பணி அமைப்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறை ( **Career Progression** ) இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதல் முறையாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு காவலருக்குத் தரப்பட்ட பதவி உயர்வு விவரங்கள்

| | |
|---|---|
| கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவி உயர்வு பெற்றவர்கள் | 55 பேர் |
| துணை காவல் கண்காணிப்பாளர் | 130 " |
| ஆய்வாளர்கள் சட்டம் ஒழுங்கு | 255 " |
| ஆய்வாளர்கள் ஆயுதப்படை | 53 " |
| உதவி ஆய்வாளர்கள் (சட்டம் ஒழுங்கு) | 173 " |
| உதவி ஆய்வாளர்கள் (ஆயுதப்படை) | 208 " |
| தலைமைக் காவலர்கள் | 1,000 " |
| முதல் நிலைக்காவலர்கள் | 10,106 " |
| பெண் தலைமைக் காவலர்கள் | 400 " |
| மொத்தம் | 20,500 பேர் |

அதாவது மொத்த காவலர்களின் எண்ணிக்கையில் 25½ விழுக்காடு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடு ஒரு ஒப்புநோக்கு

அகில இந்திய அளவில், நாட்டின் குற்றப்பதிவு கூடத்தின் புள்ளிவிவரங்களை சராசரியாக ஒப்புநோக்குகையில், தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாடுகள் மேம்பட்டுள்ளன என்பது புலனாகிறது. பின்வரும் புள்ளி விவரம் இதனை நிருபிக்கின்றது :-

1.1.1997 ன் படி புள்ளி விவரம்

| விவரம் | | தமிழ் நாடு | அகில இந்திய அளவில் |
|---|---|---|---|
| அ | நூறு சதுர கிலோ மீட்டருக்கு காவலரின் எண்ணிக்கை. | 57.4 | 39.5 |
| ஆ | ஒவ்வொரு இலட்சம் மக்கள் தொகைக்கும் காவலரின் எண்ணிக்கை. | 127 | 134 |
| இ | வருடத்திற்கு ஒரு காவலருக்காக செய்யப்படும் செலவு | ரூ.68,059 | ரூ.61,688 |
| ஈ | தண்டிக்கப்பட்டவரின் விவரம் | 66.6% | 37.8% |
| உ | முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 90.1% | 76.9% |

# 1.8.98ன் படி தமிழ்நாட்டில் உள்ள காவல் நிலையங்கள் மற்றும் புறக்காவல் நிலையங்கள்

| வ. எண் | மாவட்டம் | உ. கோ. | கா.நி | புற. கா. நி. | அனைத்து மகளிர் காவல் நிலையம் |
|---|---|---|---|---|---|
| 1. | செங்கை கிழக்கு | 7 | 40 | 1 | 2 |
| 2. | காஞ்சிபுரம் | 5 | 34 | 4 | 1 |
| 3. | திருவள்ளூர் | 4 | 27 | 2 | 1 |
| 4. | விழுப்புரம் | 6 | 43 | 3 | 2 |
| 5. | கடலூர் | 6 | 40 | 1 | 2 |
| 6. | திருவண்ணாமலை | 6 | 34 | 2 | 2 |
| 7. | வேலூர் | 7 | 51 | 4 | 3 |
| 8. | சேலம் | 5 | 32 | 0 | 0 |
| 9. | நாமக்கல் | 4 | 25 | 0 | 1 |
| 10. | தருமபுரி | 7 | 49 | 3 | 3 |
| 11. | கோயம்புத்தூர் | 7 | 45 | 6 | 3 |
| 12. | ஈரோடு | 6 | 43 | 1 | 2 |
| 13. | நீலகிரி | 5 | 25 | 3 | 2 |
| 14. | திருச்சி | 4 | 25 | 4 | 0 |
| 15. | பெரம்பலூர் | 3 | 24 | 0 | 1 |
| 16. | கரூர் | 2 | 15 | 0 | 1 |
| 17. | புதுக்கோட்டை | 5 | 34 | 3 | 2 |
| 18. | தஞ்சாவூர் | 6 | 39 | 1 | 2 |
| 19. | நாகப்பட்டினம் | 4 | 25 | 2 | 2 |
| 20. | திருவாரூர் | 4 | 25 | 4 | 0 |
| 21. | மதுரை | 5 | 36 | 4 | 1 |
| 22. | விருதுநகர் | 6 | 42 | 2 | 2 |
| 23. | திண்டுக்கல் | 6 | 34 | 0 | 2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24. | தேனி | 4 | 28 | 4 | 1 |
| 25. | இராமநாதபுரம் | 6 | 40 | 3 | 2 |
| 26. | சிவகங்கை | 5 | 33 | 5 | 2 |
| 27. | திருநெல்வேலி | 5 | 56 | 8 | 1 |
| 28. | தூத்துக்குடி | 7 | 45 | 2 | 2 |
| 29. | கன்னியாகுமரி | 4 | 31 | 4 | 2 |
| 30. | திருச்சி இருப்புப் பாதை காவல் | 2 | 16 | 14 | 0 |
| 31. | சென்னை இருப்புப் பாதை காவல் | 3 | 16 | 11 | 0 |
| 32. | சென்னை நகரம் | 16 | 82 | 4 | 3 |
| 33. | சேலம் நகரம் | 3 | 11 | 0 | 1 |
| 34. | கோயம்புத்தூர் நகரம் | 3 | 10 | 0 | 2 |
| 35. | திருச்சி நகரம் | 4 | 12 | 3 | 1 |
| 36. | மதுரை நகரம் | 3 | 16 | 1 | 2 |
| 37. | திருநெல்வேலி நகரம் | 2 | 7 | 1 | 1 |
| 38. | விமானத்தள பாதுகாப்பு | 0 | 1 | 0 | 0 |
| | மொத்தம் | 189 | 1191 | 110 | 57 |

# காவல் நிலையங்களின் வகைகள் குறித்த விவரங்கள்

1. காவல் நிலைய பணியாளர் அளவு விவரம்

| பதவியின் பெயர் | வகை 1 பெருநகர் கா.நி | | வகை 2 மாவட்ட தலைமை யிட கா.நி | | வகை 3 முனிசிபல் நகரிய தலைமை கா.நி | | வகை 4 காவல் வட்ட தலைமை யிட கா.நி | | வகை 5 ஊரக/ புறக் கா.நி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ச.ஒ | குற் றம் | ச.ஒ | குற் றம் | ச.ஒ | குற் றம் | ச.ஒ | குற் றம் | |
| ஆய்வாளர் | 1 | 1 | | 1 | | | | | |
| சார் ஆய்வாளர் சேமப்படை சார் ஆய்வாளர் | 3 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| தலைமைக் காவலர் | 5 | 1 | 5 | 1 | 4 | 1 | 1 | 1 | 2 |
| காவலர் தரம் 1 | 6 | 2 | 4 | 2 | 4 | 1 | 3 | 1 | 3 |
| காவலர் தரம் 2 | 45 | 2 | 36 | 4 | 27 | 3 | 18 | 3 | 16 |

## 2. காவல் நிலைய வகைகளின் எண்ணிக்கை விவரம்

| | வகை 1 | வகை 2 | வகை 3 | வகை 4 | வகை 5 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1.5.98 அன்றைய நிலவரப்படி | 142 | 80 | 130 | 334 | 484 | 1170 |
| அரசாணை எண் 79 நாள் 8.7.98ல் ஒப்பளிக்கப்பட்ட புதிய காவல் நிலையங்கள்( இரண்டு போக்குவரத்து காவல் நிலையங்கள் நீங்கலாக) | - | - | - | - | 16 | 16 |
| அரசாணை எண் 387 நாள் 9.7.98ல் புறக்காவல் நிலையங்களாக இருந்து முழுக்காவல் நிலையங்களாக நிலையுயர்த்தப்பட்டவை | 1 | 1 | - | - | 3 | 5 |
| 1.8.98 அன்றைய நிலவரப்படி மொத்தம் | 143 | 81 | 130 | 334 | 503 | 1,191 |

